உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-5 இதழ்-146

செப்டம்பர் 16-30 2022


விருப்ப சந்தா இதழ்




## எங்கே போனது

# பிரம்மாஸ்திரம்

# அரச இலை அலந்தரம்



அரச இலை அலந்தரம் என்பது நாடார் சமூகத்தில் திருமணத்தின் போது மணமகனுக்கும் மணப்பெண்ணுக்கும் செய்யப்படும் ஒருவித சடங்காகும்.

இந்த சடங்கு ஒருவிதத்தில் அறிவியலைச் சார்ந்து செய்யப்படும் செயலாகும்.

அரச இலையை கிழித்து மணமகன்/மணப்பெண் அவர்கள் முகத்தின் அருகில் கொண்டு சென்று சுற்றுவது தான் அரச இலை அலந்தரம். அவ்வாறு சுற்றும் போது அரச இலை பாலின் வாசனையை மணமகன்/மணமகள் நுகர்வதால் அவர்கள் உடலினுள் இருக்கும் கேடு விளைவிக்கும் கிருமிகள் அழிவதற்கும், சீக்கிரமே குழந்தை பாக்கியம் கிடைக்கவும் வழி வகுக்கும்.

அரச மரப் பிள்ளையாரை சுற்றினால் குழந்தை பிறக்கும் என்ற ஐதீகமும் இதனால்தான் கடைபிடிக்கப்பட்டது. அரசமரத்திற்கு மலட்டுத் தன்மை அகற்றும் தன்மையும், உடலில் இருக்கும் தேவையற்ற கிருமிகளை அழிக்கும் சக்தியும் உள்ளது. நம் முன்னோர்கள் ஒன்றும் மூடநம்பிக்கை கொண்டவர்கள் அல்ல, அறிவியலை அறிந்தவர்கள் என்ற உண்மையை இந்த நிகழ்வு மெய்ப்பிக்கிறது.

# அசைவமும் மன இறுக்கமும்

ஒவ்வொருவரின் உடலிலும் அபாயகரமான சமயங்களில் தப்பித்துக் கொள்ளும் எண்ணம் ஏற்படும்போது, சக்தி வாய்ந்த ஹார்மோன்கள் அட்ரீனல் சுரப்பியிலிருந்து சுரந்து இரத்தத்தில் கலக்கும்.

இந்த நீரானது விலங்குகளுக்கும் உள்ளது. ஒவ்வொரு விலங்கும் வெட்டப் படும் போது அதிக அளவில் சுரந்து அதன் இரத்தத்திலும், சதைகளிலும் கலந்து இருக்கும்.

இவற்றை உட்கொள்ளும் மனிதன் சாதாரண வேலைகளிலும் கூட ஏதோ அபாயத்தில் உள்ளது போன்ற உணர்வைப் பெறுகிறான். இதுவே மன இறுக்கமாக உருவெடுக்கிறது.

# கிருபானந்த வாரியாரும் அம்மாவின் அருமையும்

- ❖ பழுத்த மரத்தைப்போல் நமது குடும்பத்தினரும் பிறருக்கு உதவினால், நல்லதொரு குடும்பமாக திகழும்.
- ❖ பாலில் உள்ள நெய் கண்ணுக்குதெரியாது. அவ்வாறே உண்மையான பக்தியால் மட்டுமே கடவுளின் சக்தியை உணரமுடியும்.
- ❖ ஒருவர் செய்யும் நன்மையும், தீமையும் பல மடங்காகப் பெருகி அவரிடமே திரும்ப வரும்.
- ❖ இருளில்தான் அகல் விளக்கின் வெளிச்சம் தெரியும். அதுபோல் அம்மாவின் அருமை அவர் இல்லாதபோதுதான் தெரியும்.
- ❖ தீமைகளை விலக்கி நன்மைகளைச் சிந்தித்தால் வளமுடன் வாழலாம்.
- ❖ அடக்கம், குருபக்தி உள்ள மாணவன் வாழ்வில் முன்னேற்றம் அடைவான்.
- ❖ மனதை உயர்நிலைக்கு இட்டுச்செல்லும் அற நூல்களைப் படி.
- ❖ பிறர் போற்றும்போது மகிழ்ச்சி அடையாதே. பிறர் தூற்றும்போது வருந்தாதே.
- ❖ பேராசையால் துன்பம் வருமே தவிர நன்மை விளையாது.
- ❖ வாழ்க்கையில் ஏற்றமும், இறக்கமும் வரும். அனைத்து சூழல்களுக்கும் தயார்ப்படுத்திக்கொள்.
- ❖ இது நல்லது, இது கெட்டது என்று பகுத்து உணராதவனுக்கு எதுவும் சொல்லிக் கொடுக்காதே.
- ❖ வீணான பேச்சினால் எந்தவொரு நன்மையும் கிடைக்காது. ஆகவே அமைதியாக இரு.
- ❖ பிறருடைய குற்றங்களை பார்க்காதே. உன்னுடைய குற்றங்களை மறைக்காதே.



## சிறப்பு வாய்ந்த பிரம்ம முகூர்த்தமும்

# ஒருநாளில் வரும் 30 முகூர்த்தங்களும்

பிரம்ம என்றால் அறிவு. முகூர்த்தம் என்றால் காலம். நமது அறிவை உணர்வதற்கு பிரம்ம முகூர்த்தம் சிறந்த காலமாகும்.

பிரம்ம முகூர்த்தத்தின் இன்னொரு பெயர் "சரஸ்வதி யாமம்". இதனை உஷத் காலம் என்கிறது வேதங்கள். அந்த சமயத்தில் தேவர்கள் வான மண்டலத்தில் சஞ்சரிப்பதாகவும் ஒரு ஐதீகம் உண்டு. அதாவது, பிரம்ம முகூர்த்தம் என்பது காலை 4.24 மணி முதல் 5.12 மணி வரையில் உள்ள காலம் ஆகும். பிரம்மனுடைய சக்தி தேவியான சரஸ்வதி தேவி விழித்துச் செயற்படும் நேரம் பிரம்ம முகூர்த்தம் என்பதும் தொன்ம நம்பிக்கை.

"சூரியோதயே சாஸ்தமயே ஸாயினம் விமுஞ் சதி ஸ்ரீரபி ஸக்ரபாணிநம்!" என்கிறது சாஸ்திரம். மேற்கண்ட இந்த சம்ஸ்கிருத வார்த்தையின் பொருள்: சூரியன் உதயமாகும் நேரத்தில் தூங்கு பவன், இந்திரனைப் போல் செல்வச் செழிப்பு கொண்டவனாக இருந்தாலும், அவனை விட்டு திருமகள் விலகி விடுவாள்.

அதே சமயத்தில், பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து செயற்படும் போது மன நிலையானது ஒரு நிலைப்படுகின்றது. அதற்கு ஏற்ற காலமாக இது விளங்குகின்றது. அதிகாலையில் சூரிய வெப்பம் கிடையாது. சந்திரனுடைய வெப்பதிட்ப குளுமையும் கிடையாது. இவை இரண்டுக்கும் மத்தியில் நிலவு வது பிரம்ம முகூர்த்தம்.

இந்நேரத்தில் எழுந்து ஜெபிப்பது, தியானம் செய்வது, யோகா செய்வது, கல்வி கற்பது, வேலைகள் செய்வது போன்றவை சிறந்த பயனைத் தருவதோடு ஞாபக சக்தியையும் விருத்தியாகும். அது மட்டும் அல்ல, இக்காலத்தில் செய்யப்படும் பூஜைகள் முழு பலனை அளிக்க வல்லது. பதினெண் புராணங்களில் ஒன்றான சிவபுராணத்தில் ருத்ரசம்ஹிதையின் சிருஷ்டி காண்டம் 11 மற்றும் 13 வது அத்தியாயங்களில் பிரம்ம முகூர்த்தத்தின் சிறப்பைப் பற்றி சிலாகித்துச் சொல்லப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிழமைக்கும் பிரம்ம முகூர்த்தத்தில் செய்யப்படும் செயலுக்கும் ஒவ்வொரு பலன் உண்டு அதைப் பற்றி பார்ப்போம்.

### ஞாயிற்றுக் கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் அகல் விளக்கு (மண்ணால் செய்யப்பட்டது) ஏற்றி சத்ய நாராயண பூஜை செய்து பெருமாளை வழிபட்டு வர பித்ரு தோஷம் தீரும். முன் ஜென்ம கர்ம வினை அகலும், இதனால் பாவம் தொலையும். கிரக தோஷம் தீரும். மங்களம் உண்டாகும்.

### திங்கட்கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் அகல் விளக்கு (மண்ணால் செய்யப்பட்டது) ஏற்றி அம்பாளை வழிபடமனம் தெளிவடையும், பயம்நீங்கும், ஞானம் பெருகும்.

### செவ்வாய் கிழமை

பிரம்மமுகூர்த்தத்தில் பஞ்சலோக விளக்கு ஏற்றி முருகப் பெருமானை வழிபட்டு

கந்த சஷ்டி கவசம் படித்து வர வியாதிகள் தீரும். வீட்டில் மருத்துவச் செலவுகள் குறையும். கண்திருஷ்டி, பீடை, செய்வினைக் கோளாறுகள் அகலும்.

## புதன் கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் குத்துவிளக்கு ஏற்றி துளசி சாற்றி விஷ்ணு சகஸ்ர நாமம் கேட்டு மகாவிஷ்ணுவை அல்லது குழந்தை கிருஷ்ணரை வழிபட்டு வர சந்ததி விருத்தி ஏற்படும். பெண் பிள்ளைகளே பிறந்து வந்த வீட்டில் கூட ஆண் குழந்தைக்கு வழிபிறக்கும். கல்வி மேம்படும். கலைஞர்கள் குறிப்பாக வழிபட்டு வர சகல கலைகளும் சித்திக்கும்.

## வியாழக் கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் நெய் அகல் விளக்கு ஏற்றி சித்தர்கள் அல்லது மகான்கள் அல்லது உங்களது குல தெய்வங்களை வழிபட்டு வர சகல சௌபாக்கியமும் கிடைக்கப்பெறும்.

## வெள்ளிக்கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் வெள்ளி விளக்கு ஏற்றி மகாலக்ஷ்மியை கனகதாரா சுலோகம் சொல்லி வழிபட்டு வர வரவு அதிகரிக்கும் அல்லது வரவு அதிகரிக்க வழி பிறக்கும். இதனால் கடன்கள் அடைபடும். சேமிப்பு அதிகரிக்கும். வாழ்க்கை வசதிகள் மேம்படும். தொழில் அல்லது உத்யோகம் சிறக்கும். அஷ்ட லக்ஷ்மியும் வீட்டில் குடி கொள்வார்கள். சுக்கிரனின் அருளும் கிடைக்கப்பெறும். சிலருக்கு ஜாதகத்தில் காணப்படும் தரித்திர யோகமும் கூட முடிவுக்கு வரும். இதனால் ராஜயோகம் ஏற்படும்.

## சனிக்கிழமை

பிரம்ம முகூர்த்தத்தில் நல்லெண்ணெய் அகல்விளக்கு ஏற்றி ஸ்ரீருத்திரம் கேட்டு சிவபெருமானை வழிபட்டுவர சனி தோஷம் தீரும். தரித்திரம் தொலையும்.

இப்படியாக ஒவ்வொரு கிழமையும் செய்யப்படும் பிரம்ம முகூர்த்தவழிபாடுகளுக்கும் ஒரு பலன் சாஸ்த்திரத்தில் சொல்லப்பட்டு உள்ளது.

பொதுவாக ஒரு நாளைக்கு 30 முகூர்த்தங்கள் ஆட்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. (30 முகூர்த்தங்களின் நேரமும் பட்டியலில் கொடுத்துள்ளோம்) இந்த 30 முகூர்த்தங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்தது பிரம்ம முகூர்த்தம்.

## 30 வகையான முகூர்த்த விபரங்கள் மூல நூல்களில் இருந்து தொகுக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 1. | ருத்ர முஹூர்த்தம் | 06.00AM – 06.48AM |
| 2. | ஆஹி முஹூர்த்தம் | 06.48am – 07.36am |
| 3. | மித்ர முஹூர்த்தம் | 07.36am – 08.24am |
| 4. | பித்ரு முஹூர்த்தம் | 08.24am – 09.12am |
| 5. | வசு முஹூர்த்தம் | 09.12am – 10.00am |
| 6. | வராஹ முஹூர்த்தம் | 10.00am – 10.48am |
| 7. | விச்வேதேவாமுஹூர்த்தம் | 10.48am – 11.36am |
| 8. | விதி முஹூர்த்தம் | 11.36am – 12.24pm |
| 9. | சுதாமுகீ முஹூர்த்தம் | 12.24pm – 01.12pm |
| 10. | புருஹூத முஹூர்த்தம் | 01.12pm 02.00pm |
| 11. | வாஹிநீ முஹூர்த்தம் | 02.00pm –02.48pm |
| 12. | நக்தனகரா முஹூர்த்தம் | 02.48pm – 03.36pm |
| 13. | வருண முஹூர்த்தம் | 03.36pm –04.24pm |
| 14. | அர்யமன் முஹூர்த்தம் | 04.24pm –05.12pm |
| 15. | பக முஹூர்த்தம் | 05.12pm –06.00pm |
| 16. | கிரீச முஹூர்த்தம் | 06.00pm – 06.48pm |
| 17. | அஜபாத முஹூர்த்தம் | 06.48pm –07.36pm |
| 18. | அஹிர்புத்ன்ய முஹூர்த்தம் | 07.36pm – 08.24pm |
| 19. | புஷ்ய முஹூர்த்தம் | 08.24pm – 09.12pm |
| 20. | அச்விநீ முஹூர்த்தம் | 09.12pm – 10.00pm |
| 21. | யம முஹூர்த்தம் | 10.00pm – 10.48pm |
| 22. | அக்னி முஹூர்த்தம் | 10.48pm – 11.36pm |
| 23. | விதாத்ரு முஹூர்த்தம் | 11.36pm – 12.24am |
| 24. | கண்ட முஹூர்த்தம் | 12.24am – 01.12am |
| 25. | அதிதி முஹூர்த்தம் | 01.12am – 02.00am |
| 26. | ஜீவ/அம்ருத முஹூர்த்தம் | 02.00am – 02.48am |
| 27. | விஷ்ணு முஹூர்த்தம் | 02.48am – 03.36am |
| 28. | த்யுமத்கத்யுதி முஹூர்த்தம் | 03.36am – 04.24am |
| 29. | பிரம்ம முஹூர்த்தம் | 04.24am – 05.12am |
| 30. | சமுத்ரம் முஹூர்த்தம் | 05.12am – 06.00am |

www.aanmeegamalar.com

### பிரம்ம முகூர்த்த நேரத்தில் எழக்கூடாதவர்கள்:

1. கர்ப்பிணி பெண்கள்
2. ஆரம்பத்தில் இருந்தே இந்த நேரத்தில் எழுந்திருக்காத முதியவர்கள்
3. மன நோய் மற்றும் உடல்நலத்தில் பாதிக்கப்பட்டவர்கள்.
4. உணவு ஜீரணிக்கப் படுவதில் சிரமம் இருப்பவர்கள்.

# மனிதர்கள் செய்யும் பாவ புண்ணியத்தை கண்காணிக்கும் அஷ்டதிக் பாலகர்கள்



பூமியில் மானிடர்கள் செய்யும் நல்ல காரியங்களையும், தீய காரியங்களையும் சூரியனும், சந்திரனும், அஷ்டதிக் பாலகர்களும் கண்காணித்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்கிறது வேதங்கள்.

குபேரன், எமன், இந்திரன், வருணன், ஈசானன், அக்னி, வாயு, நிருதி ஆகிய இவர்கள் எண்மரும் அஷ்டதிக் பாலகராவர்

இவர்கள் பிரபஞ்சத்தின் எட்டு திசைக்கும் காவலராவர்

| | |
|---|---|
| கிழக்கு | இந்திரன் |
| தென்கிழக்கு | அக்னி |
| தெற்கு | எமன் |
| தென்மேற்கு | நிருதி (இராட்ஸசன்) |
| மேற்கு | வருணன் |
| வடமேற்கு | வாயு |
| வடக்கு | குபேரன் |
| வடகிழக்கு | ஈசானன் (சிவபெருமான்) |

## 1. இந்திரன்

இந்திரன் கிழக்கு திசையினை கண்காணிப்பவர். இவரே தேவர்கள் அனைவருக்கும் தலைவராக உள்ளார். இவரது மனைவி இந்திராணி. தேவலோகத்தின் அரசன் இந்திரன் ஆவார். இவர் காலத்தால் அழிந்த விழாவான 'இந்திர விழா" வின் நாயகன். இவர் ஐராவதம் என்னும் வெள்ளை யானையை வாகனமாகக் கொண்டவர். இவரின் ஆயுதம் மின்னலைப்போன்ற வலிமையுள்ள வஜ்ராயுதம் ஆகும். இவரே அஷ்ட திக்கு பாலகர்களின் தலைவராகவும் இருக்கிறார். இவரை வழிபட எல்லா வளங்களையும், நோய், பகையை நீக்கி வளமை அளிக்கக்கூடியவர் இந்திரன்.



ஐராவத கஜாரூடம்
ஸ்வர்ணவர்ணம் கிரீடிநம்
ஸகஸ்ர நயநம் ஸக்ரம்
வஜ்ரபாணிம் விபாவயேத்

## 2.அக்னி தேவன்



தென்கிழக்கு திசையின் அதிபதியாகக் கருதப்படுபவர், அக்கினி தேவரை வணங்கி வர மனதில் குடிகொண்டு இருக்கும் இருள் நீங்கி தெளிவு பிறக்கும். நெருப்பிற்கான அதிகாரம் இவருடையது. வேள்வியின்போது இடப்படும், நைவேத்தியப் பொருட்களை

அக்னி மற்ற தெய்வங்களுக்கு எடுத்துச் செல்வதாக கூறப்படுகிறது. இவருடைய மனைவியின் பெயர் சுவாகா தேவி. அக்னி பகவானின் வாகனம் ஆட்டுக்கிடா. இவரது ஆயுதம் தீ ஜூவாலையுடன் கூடிய வேல் ஆகும். இவரை வழிபாடு செய்தால் தேக வனப்பு மற்றும் தேக பலம், மனஅமைதி, குடும்ப மேன்மை கிடைக்கும்.

ஸப்தார்சிஷம் ச பிப்ராணம்
அக்ஷமாலாம் கமண்டலும்
ஜ்வாலாமாலாகுலம் ரக்தம்
ஸக்திஹஸ்தம் சகாஸநம்

## 3.யமன்



தெற்கு திசையின் காவலராக இருப்பவர் எமதர்மன். இவர் தரும தேவன், காலதேவன், எமதர்மராஜா என்ற பெயர்களில் அழைக்கப்படுகிறார். இவர் தர்மத்தின் வழி நடப்பவர். இறப்பின் கடவுளாக பார்க்கப்படும் இவர், ஒருவரின் வாழ்நாள் முடியும் காலத்தை கணக்கிட்டு, அந்த நேரத்தில் அவரது உயிரை பறிக்கும் பணியைச் செய்துவருகிறார். சூரிய பகவான் மகனான இவர், தேவர்களுள் மிகவும் மதி நுட்பம் மிகுந்தவராக கருதப்படுகிறார். இவரது மனைவியின் பெயர் குபேர ஜாயை. எமதர்மனின் வாகனம் எருமைக் கிடா. இவரது ஆயுதம் பாசக்கயிறு. இவரை வழிபாடு செய்தால் நம்மை அண்டியிருக்கும் தீவினைகள் அனைத்தும் நீங்கி நல்வழி பிறக்கும்.

க்ருதாந்தம் மஹிஷாரூடம்
தண்டஹஸ்தம் பயாநகம்
காலபாஸதரம் க்ருஷ்ணம்
த்யாயேத் தக்ஷிணதிக்பதிம்

## 4.நிர்ருதி



தென்மேற்கு திசையின் அதிபதியான நிருதி தேவ னின், மனைவி பெயர் கட்கி. இவருடைய வாகனம் பிரேதம். கட்கம் என்னும் வாளை ஆயுதமாகக் கொண்டிருப்பவர். இவரை வழிபாடு செய்தால், எதிரி களின் பயம் நீங்கும். வீரம் பிறக்கும். மனை சம்பந்த மான இன்னல்கள் நீங்கி சுபிட்சம் உண்டாகும்.

ரக்தநேத்ரம் ஸவாரூடம்
நீலோத்பல தளப்ரபம்
க்ருபாணபாணி மாஸ்ரௌகம்
பிபந்தம் ராக்ஷஸேஸ்வரம்

## 5.வருணன்



மேற்கு திசையின் அதிபதி வருணன்ஆவார். மழையைப் பொழிந்து பயிர் களை வளரச் செய்துமக்க ளுக்குக் களிப்பைஉண்டு பண்ணி ஸூகத் தைக் கொடுப்பவன். இவரை மழையின் கடவுள் என்று போற்றுகிறார்கள். ஆறு, குளம், ஏரி, கடல் உள்ளிட்ட நீர்நிலைகள் இவரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகக் கருதப்படுகின்றன. ஐந்து வகையான நிலங்களில் ஒன்றான நெய்தல் நிலத்திற்கு உரிய தெய்வமாகவும் வருண பகவான் வணங்கப்படுகிறார். இவரது மனைவியின் பெயர் வாருணி. வருண பகவானின் வாகனம், மகரம் என்னும் மீன் ஆகும். இவர் வருணாஸ்திரம் என்ற ஆயுதத்தை தாங்கியுள்ளார். இவரை வழிபாடு செய்தால், தேவையான மழை கிடைத்து உணவு, பஞ்சம் நீங்கும். வருணதேவரை வணங்கி வருவதால் சிறந்த அறிவாற்றலும், உடலில் வலுவும் உண்டாகும்.

நாகபாஸதரம் ஹ்ருஷ்டம்
ரக்தௌகத்யுதி விக்ரஹம்
ஸஸாங்க தவளம் த்யாயேத்
வருணம் மகராஸநம்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

## 6.வாயு



வடமேற்கு திசையின் காவலர் தான் இந்த வாயு பகவான். சிரஞ்சீவியும், ராமரின் பக்தருமான அனுமன் மற்றும் மகாபாரத காலத்தில் வாழ்ந்த பீமன் ஆகியோரின் தந்தை இந்த வாயு பகவான் என்று புராணங்கள் சொல்கின்றன. இவரது மனைவியின் பெயர் வாயு ஜாயை. வாயு பகவானின் வாகனமாக மான் இருக்கிறது. அங்குசம் என்ற ஆயுதத்தை இவர் தாங்கியிருக்கிறார். வாயு வடிவமற்றவன். மக்களுடைய ப்ராணனுக்கு ஆதாரமாயுள்ளவன்.

இவனை உபாசிப்பதால் நீண்ட ஆயுளையும், பலத்தையும் பெறலாம்.

ஆபீதம் ஹரிதச்சாயம்
விலோலத்வஜ தாரிணம்
ப்ராணபூதம்ச பூதாநாம்
ஹரிணஸ்தம் ஸமீரணம்

## 7.குபேரன்



குபேரன் மக்களுக்கு ஸௌகத்தைக் கொடுத்து ஸம்பத்தையும் செல்வத்தையும் வளரச் செய்பவன். மகாலட்சுமியின் செல்வங்களை நிர்வகிக்கும் பொறுப்பை இவர் வகிப்பதாகவும் கூறப்படுகிறது. இவருக்கென்று தனிக் கோவில்கூட உள்ளது.

குபேரம் மநுஜாஸீநம்
ஸகர்வம் கர்வவிக்ரஹம்
ஸ்வர்ணச்சாயம் கதாஹஸ்தம்
உத்தராதிபதிம் ஸ்மரேத்

## 8.ஈசாநன்



வடகிழக்குத் திசையின் அதிபதியான ஈசானன், மங்கலத்தின் வடிவமாக பாவிக்கப்படுகிறார். சிவபெருமானின் ஐந்து முகங்களில் ஒன்று ஈசானம் என்பது குறிப்பிடத்தக்கது. ஈசானனின் மனைவிபெயர் ஈசான ஜாயை. இவர் எருதினை வாகனமாக வைத் திருப்பவர். திரிசூலம் இவரது ஆயுதம் ஆகும். இவரை வழிபாடு செய்வதன் மூலமாக ஞானத்தைப் பெற முடியும்.

ஈஸாநம் வ்ருஷபாரூடம்
த்ரிஸூலம் வ்யாலதாரிணம்
சரச்சந்த்ர ஸமாகாரம்
த்ரிநேத்ரம் நீலகண்டகம்

நாம் செய்யும் செயலுக்கு ஏற்ற திசையும் அதன் பாதுகாவலராகவும், கண்காணிப்பாளராகவும் இருக்கும் இந்த பாலகர்களை வழிபட்டு நம் செயலை தொடங்கினால் எப்போதும் சுபிட்சம் உண்டாகும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம் .காம்

# எட்டு திசையையும் தாங்கிப்பிடித்திருக்கும்
# அஷ்டதிக் கஜங்கள்



எட்டு திசைகளும் எட்டு விதமான கஜங்களால் தாங்கி நிறுத்தப் பட்டுள்ளன. கஜங்கள் என்றால் யானை என்று பொருள்படும்.

எட்டு திக்குகளையும் (திசைகள்) தாங்கி நிற்கும் கஜங்கள் 'அஷ்ட திக் கஜங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| கிழக்கு | ஐராவதம் |
| தென்கிழக்கு | புண்டரீகம் |
| தெற்கு | வாமனம் |
| தென்மேற்கு | குமுதம் |
| மேற்கு | அஞ்சனம் |
| வடமேற்கு | புஷ்பந்தம் |
| வடக்கு | சா்வ பௌமம் |
| வடகிழக்கு | ஸுப்ர தீபம் |

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து

கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்**மெயில்

புத்தகத்தில் (e-book)

வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD

eBook

DOWNLOAD

eBook DOWNLOAD

free

இதுவரை வெளிவந்த

**145** க்கும் மேற்பட்ட

இதழ்களை



**aanmeegamalar.com**

இணையதளத்தில்

இலவசமாக

படிக்கலாம்.

# இரவில் மட்டும் திறக்கப்படும் காலதேவி கோவில்




தூங்கா நகரம் என்ற பெயர் பெற்ற மதுரை யில், 12 ராசிகள், 27 நட்சத்திரங்கள், 9 நவகிரஹங் களைக் கொண்ட 'காலதேவி அம்மன்' கோவில் மாலை முதல் அதிகாலை வரை மட்டுமே நடைதிறந்திருப்பது இக்கோவிலின் சிறப்பாக கருதப்படுகிறது.

ஒருவனின் நேரத்தை விஞ்ஞானத்தால் கணிக்கவே முடியாது. இப்படிப்பட்ட நேரத்திற்காக ஒரு கோயில் இருக்கிறது என்றால், அதை நம்ப முடிகிறதா?

மதுரை மாவட்டம் எம்.சுப்புலாபுரம் அருகில் உள்ள சிலார் பட்டி கிராமத்தில் நேரத்திற்கென்றே ஒரு கோவில் உள்ளது.

இந்த கோயிலில் கோபுரத்திலே "நேரமே உலகம்" என்ற வாசகம் எழுதப்பட்டிருப்பது சிறப் பாகும்.

புராணங்களில் வரும் காலராத்திரியைதான் இங்கு காலதேவியாக கருதுகின்றனர். இவள் இயக்கத்தில்தான் ஈரேழு புவனங்களும்

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!





இயங்குகிறது.

காத்தல், அழித்தல், பஞ்ச பூதங்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள், முப்பத்தி முக்கோடி தேவர்களுக்கும் அப்பாற்பட்டு இயங்கும் சக்தி காலதேவிக்கு உண்டு.

நேரத்தின் அதிபதியான காலதேவியால் ஒருவரது கெட்ட நேரத்தை நல்ல நேரமாக மாற்ற முடியும், என்பதுதான் இக்கோயிலின் தத்துவம்.

சூரிய அஸ்தமனத்திற்கு பிறகு நடை திறக்கப்பட்டு, சூரிய உதயத்திற்கு முன் நடை சாத்தப்படுகிறது.

இரவு முழுவதும் பக்தர்களின் தரிசனத்திற்காக, இங்கு நடை திறந்திருக்கும். இப்படி இரவு முழுவதும் நடை திறந்திருக்கும் ஒரு கோயில் உலகிலேயே இது ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

பவுர்ணமி, அமாவாசை தினங்களில் இங்கு பக்தர்களின் கூட்டம் அதிகம் காணப்படுகிறது. காலதேவிக்கு உகந்த நாட்களாக இவை கருதப்படுகிறது.



அழகுராஜா

கோயிலை தலா 11சுற்றுகள் வலமிருந்து இடமாகவும், இடமிருந்து வலமாகவும் சுற்றி வந்து, காலச்சக்கரத்தின் முன் அமர்ந்து 11 வினாடிகள் தரிசித்தால்போதும்.

கெட்டநேரம் அகன்று நல்லநேரம் வரும் என்பதுதான் இக்கோயிலின் நம்பிக்கை.

காலச்சக்கரத்தின் முன்னிருந்து வேண்டும்போது, எனக்கு அதைக்கொடு, இதைக் கொடு, அவனை பழிவாங்கு என வேண்டுதல்கள் இல்லாமல், “எனக்கு எது நல்லதோ அதைக் கொடு’’ என வேண்டினால் போதும்.

செல்லும் வழி:

மதுரையில் இருந்து ராஜபாளையம் செல்லும் பேருந்தில் ஏறி எம். சுப்பலாபுரம் மெயின்ரோட்டில் இறங்கி கோவிலுக்கு நடந்தோ, ஆட்டோக்களிலோ செல்லமுடியும்.

தெரியாதவர்கள் சாதாரண நாட்களில் செல்வதைவிட பௌர்ணமி, அமாவாசை நாட்களில் செல்வதே சிறப்பு.

இரவு நேரக்கோவில் என்பதால் போதிய வசதிகள் சாதாரண நாட்களில் கிடைக்காது.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# விருந்து, பிச்சை, தர்மம், தானம்

## வித்தியாசம் என்ன?

### விருந்து

வீட்டுக்கு அழைத்து உணவு கொடுத்தால் அது "விருந்து"

ஏழை எளியவர்களை அழைத்து அவர்களுக்கு விருப்பமான அனைத்து உணவுகளையும் அவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளை தேவையான அளவுக்கு கொடுத்து அவர்களுக்கு மனம் குளிர செய்வதுதான் விருந்தாகும்

### பிச்சை

கேட்ட பின் கொடுத்தால் அது "பிச்சை"

நாம் இருக்கும் இடத்திற்கு நம்மை தேடி வந்து நாம் உண்ட உணவு மீதமுள்ள உணவை கேட்டு பெற்றுச் செல்பவர்தான் பிச்சை

### தர்மம்

இருக்கும் இடம் தேடிச் சென்று கொடுத்தால் அது "தர்மம்"

தர்மம் என்பது பரிகாரச் செயல் என்றுதான் சொல்லவேண்டும், தர்மம் செய்த பொருட்கள் பொருத்து பலன்ஏற்படும் என்று ஜோதிட நூல்கள்சொல்கிறது.

உதாரணமாக சொல்ல வேண்டுமானால்...

"நான் முறைப்படி சஷ்டி விரதம் இருக்கிறேன், பிரதோஷத்தில் வழிபடுகிறேன், இப்படி நான் முறையாக வாழ்ந்தாலும் என்னை இந்த தீய கர்ம பலன்விட வில்லையே என்ன செய்வது எனகுழப்பம் உள்ளது" என்று ஒருசிலர் புலம்புவார்கள்.

இதுபோன்றவர்கள், ஒரு செயலை செய்த பின்பு மனதில் மமதையாக நான் இதை செய்தேன் என்ற எண்ணம் தோன்றி விட்டால் அவர்கள் செய்த தர்மச் செயலுக்கு உண்டான பலன் இல்லாமல் போய்விடும்.

கோவில் கும்பாபிஷேகம் செய்து விட்டு, நான் 2 கோவில் கும்பாபிஷேகம் செய்து உள்ளேன், நான் 18 வருடம் சபரிமலைக்கு சென்றுள்ளேன், நான் 9 வருடமாக சுமங்கலி பூசை செய்துள்ளேன்,



நான் 10 வருடமாக அண்ண தானம் செய்கிறேன், இப்படி மனதில் தோன்றும் மமதை தீமை செய்து விடும்.

இந்த மமதை தான் தானத்தின் முழுமையான தராமல் எதிர் பலன்களை தந்துவிடும்.

இதுபோன்று தற்பெருமை பேசுபவர்கள் தர்மம் செய்யாமல் இருந்துவிடலாம்.

### தானம்

மகான்கள், ஞானிகள் நமக்கு சொல்லிக் கொடுத்த முதல்பாடம் தான் அன்னதான முறை யாரென தெரியாமல் கொடுத்தால் அது "தானம்"

தானத்தில் சிறந்த அன்னதானம், இன்று ஆலயங்களில், மடங்களில், இத்தானத்தை செய்து வருவதை பார்க்கிறோம். பொதுவாக தானம் என்பது என்ன என புரிந்துகொள்ள வேண்டும் நம்மிடம் உள்ள ஒரு பொருளை பிறருக்கு எந்தபலனையும் எதிர்பாராது திருப்தியாக மன நிறைவோடு தருவதே தானம்.

அன்னதானம் செய்தவருக்கு உதவி செய்ய தெய்வம் ஓடி வரும். "கர்மத்தை" கலைக்கும்சக்தி அன்னதான செயலுக்கு உண்டு.

அன்னதானம் செய்பவர் தற்பெருமை கொண்டு விளம்பரப்படுத்தி செய்தால் எதிர்பலனை அனுபவித்தே தீரவேண்டும்.

# எங்கே சென்றாள் கண்ணகி?

அநீதிக்கு எதிராக பொங்கிஎழுந்த கண்ணகி மதுரையை எரித்த பின் எங்கே சென்றாள் தெரியுமா?

கணவனை கொன்ற அரசனையும் மதுரையை யும் எரித்து கோபம் அடங்காமல், அழுது கொண்டே, சித்த பிரமை பிடித்தவள் போல் கால் போன போக்கில் கண்ணகி நடக்க ஆரம் பிக்கிறாள்.

முடிவில், 14 நாட்களுக்குப் பிறகு, சேரநாட்டு எல்லையில் இருந்த கொடுங்காவலூர் என்ற ஊருக்கு அருகே உள்ள வண்ணாத்தி பாறையை சென்றடைகிறாள்.

இது, தற்போதைய தமிழக – கேரள எல்லைப் பகுதியான 'இடுக்கி' ' மாவட்டமாகும்.

அங்கு வாழும் குறவர்களிடம் தனக்கு நடந்த அநியாயத்தை கூறி கண்கலங்குகிறாள்.

மேலும் சில காலம் அவர்களுடன் வாழ்ந்து வருகிறாள்.

மரணம் எப்போது வரும்?தன் கணவன் கோவலனை எப்போது சேருவோம் என்று சதா தன் கணவன் நினை வோடு, தன் மரணத்தை நோக்கி காத்துக் கொண்டிருந்தாள்.



ஒரு நாள் தேவலோகத்தில் இருந்து நிலவின் வழியாக கோவலன் வந்து தன் மனைவி கண்ணகியை அழைத்துச் சென்றதை அங்குள்ள குறவர்கள் பார்க்கின்றனர், (இதுகுறித்து ஒரு குறிப்பு உள்ளது).

இந்த நிகழ்வைப்பற்றி அரசன் சேரன் செங்குட்டுவனிடம் மக்கள் கூறுகின்றனர்.

அதனை கேட்டு பரவசமடைந்த சேரன் செங் குட்டுவன் அந்த இடத்தில் கண்ணகிக்குஒரு கோயிலை கட்டினார். அதனுள் கோவலனும் கண்ணகியும் கடவுளராக வைத்து வணங்கப்பட் டனர்.

கண்ணகிக்கு அவர் ஆசைப்பட்ட வாழ்க்கை இந்த இடத்தில் கிடைத்ததால் இங்கே வேண்டிக் கொள்ளும் அனைத்தும் நிறைவேறும் என்றும் நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

காலப்போக்கில் இச்செய்தி பரவ ஆரம்பித்து, கண்ணகிக் கோவில், கேரள, தமிழக மக்களி டையே மிகப் பிரபலம் அடைந்து வழிபாட்டுத் தலமாக திகழ்கிறது.

கண்ணகி நடந்து வந்த பாதையாக கருதப்படும் ஒரு ஒற்றை அடிப்பாதை ஆறு கிலோமீட்டர் தூரத்திற்கு இன்றும் இங்கே உள்ளது. சின்கா பாதை என்று இதற்கு பெயர், இந்தப் பாதையில்தான் இன்றும் பக்தர்கள் சென்று கண்ணகியை தரிசிக்கின்றனர்.

வருடத்திற்கு ஒருமுறை, அதாவது சித்ரா பௌர்ணமி அன்று கோவலன் கண்ணகியை தரிசிக்க மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.



ரமண மகரிஷியின் முக்கியமான பக்தர்களில் குஞ்சுஸ்வாமிகள் என்பவரும் ஒருவர். இவர் பாலக்காட்டிற்கு அருகில் உள்ள செறக்கோடு என்ற ஊரில் 1897ம் ஆண்டு ஜனவரி மாதம் பிறந்தார். சிறு குழந்தையாக இவர் இருக்கும்பொழுதே சிவபெருமானுடைய பரிபூரணமான அருள் இவருக்கு கிடைத்தது. அந்த ஊரில் உள்ள குளத்தில் இவர் நீராடுவதற்குச் செல்வார். அப்பொழுது அந்த ஊரில் உள்ள சிவபக்தர்கள் தங்கள் கைகளில் அழகான பட்டுப் பையில்



# சிவனின் ஆசிபெற்ற குஞ்சுஸ்வாமிகள்

திருநீறு வைத்துக்கொண்டு பூசிக்கொள்வதைப் பார்த்தார். தனக்கும் அதைப் போல் ஒரு பட்டுப் பை வேண்டும் என்று ஆசை வருகின்றது.

அன்று இரவு அவருக்கு ஒரு கனவு. அந்தக் கனவில் கைலாசபதியான சிவபெருமான் தரிசனம் தந்து, அந்த ஊரில் உள்ள ஒரு மரத்தடியை கனவில் காட்டிவிட்டு மறைந்து விடுகின்றார். மறுநாள் காலை அந்தக் குழந்தை அந்த மரத்தின் அடிக்கு சென்று பார்க்கின்றார். அதன் அடியில் பன்னிரண்டு அணா காசுகள் கிடக்கின்றது. அதை எடுத்துக் கொண்டு விபூதி பை வாங்க கடைக்குச் செல்கின்றார்.

விபூதி பையின் விலையும் சரியாக பன்னிரண்டு அணா என்பதை அறிந்து அதிசயிக்கின்றார். அடுத்ததாக சிவனடியார்கள் கையில் ருத்திராட்ச மாலை வைத்துக்கொண்டு ஜபம் செய்வதைப் பார்க்கின்றார். அவருக்கும் ஒரு ருத்திராட்ச மாலை வேண்டும் என்று ஆசை வந்துவிட்டது. அன்று இரவும் சிவபெருமான் கனவில் வந்துவிட்டார். அந்த ஊரில் உள்ள ஒரு பெரிய குளத்தையும் அதில் மலர்ந்துள்ள ஒரு பெரிய தாமரையையும் காட்டிவிட்டு மறைந்துவிட்டார்.

மறுநாள் காலையில் அந்தக் குளத்தில் அப்படியே ஒரு பெரிய தாமரை இருப்பதைப் பார்த்து வியப்படைந்தார். நீரில் இறங்கி அந்த தாமரையின் அருகில் சென்று பார்க்கின்றார். அந்த தாமரை மலருக்குள் தங்கத்தில் கட்டிய அழகான ருத்திராட்ச மாலை இருந்தது.

திருநீறு பை கிடைத்தது. அழகான ருத்திராட்ச மாலையும் கிடைத்துவிட்டது. "ஜபமாலையை வைத்து எந்த மந்திரத்தை ஜபம் செய்வது?" என்று தெரியாமல் விழித்தார். அன்று இரவு மீண்டும் சிவபெருமான், அவருடைய கனவில் வந்து "நமச் சிவாய" என்ற ஐந்தெழுத்தை உபதேசம் செய்தார்.

இப்படியாக வளர்ந்து வந்த குஞ்சு ஸ்வாமிகளை அவருடைய பெற்றோர்கள் அவர்களுடைய குலகுருவிடம் கொண்டுவந்து விட்டார்கள். குஞ்சுஸ்வாமிகளுக்கு அந்த குலகுருவிடம் மனது ஈடுபடவில்லை. அந்த சமயத்தில் திருவண்ணா மலையில் வாழும் ரமணமகரிஷியைப் பற்றி ஒருவர் தெரிவிக்கின்றார்.

ரமண மகரிஷியை பற்றி கேட்டவுடன் குஞ்சு ஸ்வாமிகளுக்கு உடலில் ஒரு இனம்புரியாத மாற்றம் ஏற்பட்டது. உடனே திருவண்ணாமலைக்குச் சென்று ரமண மகரிஷிகளை தரிசனம் செய்ய வேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டது. வீட்டில் சொல்லாமல் திருவண்ணாமலைக்கு கிளம்பி விட்டார். கையில் போதுமான பணம் கிடையாது. சரியான விவரம் தெரியாது.

திருவண்ணாமலையில் பிளேக் நோய் பரவி யிருந்ததால் ஊருக்குள் செல்வதற்குபலவித மான தடைகள் இருந்தது. சிவபெருமானு டைய



அருளால் எல்லா தடைகளும் விலக, திரு வண்ணாமலை வந்து தனது குருநாதரான ரமண மகரிஷியின் திருவடியை வந்தடைந்து பரம சாந்தியை அடைந்தார். ரமண மகரிஷி யாருக்கும் வாய்முகமாக எந்த உபதேசமும் செய்வதில்லை என்று கேள்விப் பட்டார். அதனால் முதல் முதலாக ரமண மகரிஷி எதை தன்னிடம் பேசுகின்றாரோ அதையே உபதேசமாக எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்தார்.

அந்த சமயம் ஒரு தேங்காய் சிரட்டையில் சூடான கஞ்சியை நான்கு நாய்க்குட்டிகள் குடிப்ப தற்கு ஓடி வந்தன. அந்த குட்டிகளுக்கு அந்த கஞ்சி சுடப்போகின்றது என்ற கவலையினால் ரமண மகரிஷி குஞ்சுஸ்வாமிகளைப் பார்த்து "நான்கையும் பிடி, ஒன்று ஒன்றாய் விட" என்றார். அதன்படியே நான்கு நாய்க்குட்டிகளையும் பிடித்து ஒவ்வொன்றாக விட்டார்.

"சரி, இதில் என்ன உபதேசம் இருக்கின்றது என்கின்றீர்களா? ஆமாம். இது உபதேசம்தான். முக்தியை விரும்புகின்ற ஒருவன் நான்கு செயல் களை நன்றாக பிடித்துக்கொள்ள வேண்டும். பிறகு அவைகளை ஒவ்வொன்றாய் விட்டுவிட வேண்டும். நல்ல நூல்களைப் படித்தல், மந்திரத்தை ஜபம் செய்தல், தியானம் செய்தல், ஆத்ம தத்துவத்தை விசாரம் செய்தல் என்ற நான்கையும் தொடர்ந்து செய்ய வேண்டும். ஜபம் நன்றாக கைகூடி வந்துவிட்டால், பாராயணத்தை விட்டுவிட வேண்டும். தியானம் நன்றாக கைகூடிவிட்டால் ஜபத்தை விட்டுவிடலாம். ஆத்ம தத்துவ விசாரம் கைகூடிவிட்டால் தியானத்தை விட்டு விடலாம்'' என்பதே அது.

ரமண மகரிஷிக்கு சேவை செய்துகொண்டும், அவர் காட்டிய வழியில் வாழ்ந்தும் முக்திய டைந்தார். நூறு வருடங்கள் வாழ்ந்த இவர் திருவண்ணாமலையிலேயே சித்தியடைந் தார். இன்றும் அவருடைய சமாதி ரமணாஸ்ரமத் திற்குள் இருக்கின்றது. ரமணாஸ்ரமம் செல்லும் பொழுது குஞ்சுஸ்வாமிகளின் சமாதியையும் தரிசனம் செய்து புண்ணியத்தை சம்பாதித்துக் கொள்ளலாம்.

# எங்கே போனது பிரம்மாஸ்திரம்



மஹாபாரத போருக்கு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நாட்டில் இயல்பு நிலை திரும்பியது.. அர்ஜுனன் தனது அண்ணனாகிய கர்ணனனை கொன்றதற்கு பிராயச்சித்தமாக கர்ணனின் மகனான வ்ரிஷகேதுவை தனது மகன் போல அன்போடு, தனக்கு தெரிந்த அனைத்து அஸ்திர வித்தைகளும் சொல்லிக்கொடுத்து வளர்த்தான்..

வ்ரிஷகேதுதான் இந்த உலகத்தில் பிரம்மாஸ்திரம் உட்பட அனைத்து அஸ்திரங்களும் அறிந்த கடைசி மனிதன்..

ஆனால் கிருஷ்ணர் அதற்க்கு பிறகு இந்த வித்தைகளை இனி யாருக்கும் சொல்லித்தர கூடாது.. ஏனென்றால் இனி கலியுகத்தில் இதை யாரும் பொதுநலனுக்காக பயன் படுத்த மாட்டார்கள்.. சுயநலத்தால் உலகை அச்சுறுத்துவார்கள்..

ஆகையால் இந்த கலை இனி உன்னோடு அழிந்து போகட்டும் என சத்தியம் வாங்கிக் கொண்டார்.. எனவே வ்ரிஷகேதுவுடன் இந்த அஸ்திர வித்தைகள் எல்லாம் காணாமல் போனது..

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# 12 ராசிகளுக்கான பலன்கள்

# 2022 செப்டம்பர்

## (15–09–22 முதல் 30–09–22 வரை)

## மேஷம் முதல் மீனம் வரை

குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70% முதல் 75% வரையிலும், கோட்சாரம் 25% – 30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தை ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.



ஜோதிட ஆலோசனைக்கு:
ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர்,
கிருஷ்ணகிரி.
**கி.கார்த்திகேயன்.**
செல்: 9538882623.

## மேஷம்



ராசியில் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், ராசி நாதன் செவ்வாய் ராசிக்கு இரண்டில், பஞ்சமாதிபதி சூரியன் 6 இல் 3 மற்றும் 6 ஆம் அதிபதி புதனுடன், தன மற்றும் சப்தமாதிபதி சுக்கிரன் 5 இல், கர்மாதிபதி சனிபகவான் 10 இல் மற்றும் தன காரகன் குரு ராசிக்கு 12 இல், கேது 7 இல் எடுத்த காரியம் சிறப்பாய் முடியும், தொழில், குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த தன லாபம் கிடைக்கும். நவ நாக ரீக பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். அரசு, தந்தை வழியில் காரிய தாமதம் உண்டாகலாம். அரசு வேலை, அரசு சம்பந்தப்பட்ட காரியங்களை ஒரு மாதம் தள்ளிப்போடுவது நல்லது. ஜாதகரின் பிள்ளைகளுக்கு எதிர்பார்த்த வேலை கிடைக்கும். திருமணத்தை எதிர்நோக்குபவர்களுக்கு காலம் கூடிவரும். வேலை, தொழில் செய்யும் இடத்தில் கவனம் நிதானம் தேவை. தேவையற்ற பகைமைஉருவாகாமல் இருக்க அமைதி காப்பது நல்லது. வியாபாரிகள் தொழி லாளர்களை அனுசரித்து வேலை வாங்கினால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும். புனித யாத்திரை, இன்சூரன்ஸ் பணம், நீண்டகால டெபாசிட்டுகளில் லாபத்தை எதிர்பார்க்கலாம். பூர்வீக சொத்துக்கள் கிடைக் கும். எதிர்பாராத திடீர் பொருள் பண வரவு உண்டு. சிலர் கோயில், குளம் என புனித யாத்திரை சென்று வருவார்கள். பரிகாரம்: சோமேஸ்வரர், தட்சிணாமூர்த்தி வழிபாடு, பசுமாடு, காளை போன்ற பிராணிகளுக்கு உணவளித்தல்.

## ரிஷபம்



ராசிநாதன்சுக்கிரன்ராசிக்கு 4 இல், ராசியில் 7,12–க் குடைய செவ்வாய், 4–க்கு டைய சூரியன் பஞ்சமா திபதி புதனுடன் 5 இல், 6 இல் கேது குருவின் சாரம், 9 இல் பூரண யோகாதிபதி சனி பகவான், 11 இல் அஷ்டம மற்றும் லாபாதிபதி குரு, 12 இல் ராகு சுக்கிரன் சாரம். பணிக்கு செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த பதவி, ஊதிய உயர்வு கிடைக்கும். குடும்ப நிலவரம் சீராக இருக்கும். திடீர் பொன் பொருள்,வண்டி வாகன சேர்க்கை உண்டு. பயணத்தில் சிறிது கவனமும் அவசியம். இனம் புரி யாத கவலைகள் வந்து போகும். சிலர் காய்ச்சல் தலைவலி போன்ற தொந்தரவுக்கு ஆளாகலாம். சகோதர உறவுவழி உதவிகள் உண்டு. மாணவ மாணவிகள் படிப்பில் சிறந்து விளங்குவர். வியாபாரிகளுக்கு தொழிலில் தடைகள்வந்து போகும். தொழிலாளர்கள் கடுமையாக

உழைக்க வேண்டிவரும். சிலர் ஆன்மீக, தர்ம காரியங்களுக்காக செலவு செய்வார்கள். சிறு பயணங்கள் ஏற்படும். உறவினர்களை சந்திப்பீர்கள்.

தாய் தந்தையர் உடல் நிலை சீராக இருக்கும். அரசு சார்ந்த விஷயங்களில் ஆதாயம் உண்டு. வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். திருமண வயதுள்ளவர்களுக்கு உரிய வரன்கள் அமையும். 25, 26 தேதிகளில் புதிய முயற்சிகளை தொடங்கலாம். 29,30 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. பரிகாரம்: விநாயகர், துர்க்கை வழிபாடு. குரங்கு, கோவில் யானை போன்ற விலங்குகளுக்கு உணவளித்தல் நன்று.

## மிதுனம்



ராசியாதிபதி புதன் கேந்திரத்தில் சூரியனுடன், 5, 12 க்குடைய யோகாதிபதி சுக்கிரன் 3 இல், 6 மற்றும் 11 குடைய செவ்வாய் 12 இல், பாதகாதிபதி குரு ராசிக்கு 10 இல், அஷ்டம மற்றும் தர்மாதிபதி சனிபகவான் 8 இல், ராகு சுக்கிரன்சாரத் தில் 11 இல், கேது குருவின் சாரத்தில் 5 இல், குடும்ப நிலவரம் சீராகஇருக்கும்.

பெரியோர்களின் உதவிகள் அவர்களால் திடீர் ஆதாயம் உண்டு. வண்டி வாகனம் பழுது ஏற்படும் அதனால் செலவுகள் உண்டு. அதனால் நன்றாக இருக்கும் போதே சிறு செலவுகள் செய்து விடவும். மாணவர்கள் படிப்பில் சிறு சிறு தடைகள் ஏற்படும். அரசு சார்ந்த விஷயங்களில் சாதகமான நிலை, ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் படிப்பு சார்ந்த விஷயங்களுக்குகாக சிலர் நீண்ட கால கடன்கள் வாங்க நேரிடும். நன்கு யோசித்து முடிவு செய்யவும். வீடு தொழில் சார்ந்த விஷயங்களில் சிலர் அதிக முதலீடுகள் செய்வர். சிலருக்கு மருத்துவமனை சென்றுவரும் நிலை ஏற்படலாம்.

பயணத்தில் கவனம் தேவை. உஷ்ண சம்பந்தமாக தொந்தரவுகள் சிலருக்கு ஏற்படலாம். இளைய சகோதரருக்கு உங்களால் அனுகூலம் ஏற்படும். சிறு சிறு பொழுதுபோக்கு, சுற்றுலா பயணங்கள் உண்டு. 3 ஆம் வாரத்தில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். மாத கடைசியில் புதிய திட்டங்களை வைத்துக் கொள்வது நல்லது. பரிகாரம்: குல தெய்வ, சுப்பிரமணியர் வழிபாடு. கோழி, சேவல், எறும்பு போன்ற உயிரினங்களுக்கு உணவளித்தல்.

## கடகம்



வார தொடக்கத்தில் இருந்த குழப்பநிலை வார மத்தியில் தெளிவடையும். 2 இல் பாதகாதிபதி சுக்கிரன், தனாதிபதி சூரியன் 3 இல் 3, 12–க்குடைய புதனுடன், 4 இல் கேது குரு சாரத்தில், 7, 8–குடைய சனி பகவான் 7 இல், 6, 9 க்குடைய குரு 9 இல், ராகு பகவான் 10 இல் சந்திரன் சாரம். 11 இல் யோகாதிபதி செவ்வாய். குடும்பத்தில் சுப செலவுகள் சுப விரயம் ஏற்படும். இளைய சகோதர வழியில் ஆதாயம் உதவிகள் உண்டு. கணவன் மனைவி அனுசரித்து செல்வர். வீடு, வாகன வகையில் கடன்கள் ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் வருமானம் உண்டு. அரசு ஊழியர்கள் பயனடைவர். தொழில் முறை பயணங்கள் உண்டு.

மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர் வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். சீருடை பணியாளர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். எதிர்பார்த்த தனவரவு உண்டு. ஆன்மீக பயணங்கள், குல தெய்வ வழிபாடு ஏற்படும். திருமண வயதுள்ளவர்களுக்கு வரன்கள் கூடிவரும். பூர்வீக விஷயங்கள் சாதகமாக முடியும். குடும்பத்தில் பெண்கள் வழியில் சிறு பிரச்சனைகள் தொந்தரவுகள் உண்டாகலாம். மாமியார் மருமகள் அனுசரித்து செல்லவும். தயார் உடல் நிலையில் சீரான முன்னேற்றம் இருக்கும். தந்தையின் ஆதரவு உண்டு. வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. மாத இறுதியில் புதிய முயற்சிகள் பலன் தரும். பரிகாரம்: வெள்ளிக்கிழமை ராகுகால பூஜை, துர்க்கை வழிபாடு, நாய், ஆடு போன்ற 4 கால் பிராணிகளுக்கு உணவளித்தல்.

## சிம்மம்



ராசியாதிபதி சூரியன் ராசிக்கு இரண்டில் புதனுடன் புத ஆதித்ய யோகத்தில், ராசியில் 3, 10 குடைய சுக்கிரன், 3 இல் கேது பாதகாதிபதி குருவின் சாரம், 6 இல் 6, 7 குடைய சனி பகவான் 8 இல் பாதகாதிபதி குரு, 9 இல் பாதக ஸ்தானத்தில் ராகு சுக்கிரன் சாரத்தில், 10 இல் யோகாதிபதி செவ்வாய்

குடும்ப நிலவரம் சுமாராக இருக்கும். தொழில் வருமானம் சீராக இருந்த போதிலும் முயற்சிகளில் தடை தாமதம் வீண் விரையங்கள்

ஏற்படும். சகோதர உறவுகளிடையே சிலருக்கு சங்கடங்கள் தடைகள் ஏற்படலாம். தொழிலாளர், பணியாளர்கள் கடுமை யாக உழைக்க வேண்டிவரும். உணவு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சீருடை பணியாளர்கள் சிறப்புறுவர்.

கடன் வாங்குவது, ஜாமீன் கையெழுத்து போடுவதை தவிர்ப்பது நல்லது. உறவுகளுக்காக கடன் வாங்கி கொடுத்தால் நீண்ட கால கடனாக அது மாறும் வாய்ப்புண்டு. பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றம் உன்டு. கடுமையாக உழைத்து வெற்றி பெறுவார். அரசுவழி ஆதாயம் அனுகூலம் உண்டு. மூத்தவர்களால் உதவி உண்டு. தாயர் உடல் நிலை சீராக இருக்கும். தந்தை வழியில் சில சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். வார தொடக்கத்தில் புதிய முயற்சிகளை தவிக்கவும். பரிகாரம்: துர்க்கை வழிபாடு, சனீஸ்வரர் வழிபாடு வயதானவர்களுக்கு, உடல் ஊனமுற்றோருக்கு உதவுதல் அனுகூலமான பலன்களை தரும்.

## கன்னி:



ராசியில் ராசியாதிபதி புதன் 12 குடைய சூரியனுடன் சேர்க்கை. இரண்டில் கேது குருவின் சாரத்தில், 5, 6 குடைய சனிபகவான் 5 இல், 7 இல் 4, 7 குடைய பாதகாதிபதி குரு பகவான். 8 இல் ராகு யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 3, 8 குடைய செவ்வாய் 9 இல், 12 இல் யோகாதிபதி சுக்கிரன். குடும்ப விவகாரங்களில் தடை, தடங்கல் தாமதங்கள் நீடிக்கும். நீண்டகால சேமிப்புகள் தற்போது பலனளிக்கும். பூர்வீக விவகாரங்கள் முடிவுக்கு வந்து அதனால் ஆதாயம் அடைவீர்கள். நீண்டகால கடன், நோய் தொல்லைகள், விரோதம் முடிவுக்கு வரும். மாணவர்கள் படிப்பில் மந்த நிலை நீடிக்கும். அதிக முயற்சி தேவை. பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலைமை சீராக இருக்கும். சகோதர வழியில் உதவிகள் உண்டு. தாயார் வழியில் அனுகூலமற்ற நிலை நீடிக்கும். தந்தைவழியில் சாதகமான நிலை நீடிக்கும். வண்டி வாகனம், வீடு போன்ற வகையில் செலவுகள் உண்டு. கணவன் மனைவி இடையே அனுசரணையான நிலை இருந்து வரும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சம்பந்தி வகையில் ஏதேனும் அனுகூலமற்ற செய்திகள் வரலாம். திருமண வயதுடையவர்களுக்கு வரன்கள் கூடிவரும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். எதிர்பாராத திடீர் பொருள் சேர்க்கை ஏற்படும். வார தொடக்கத்தில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். பரிகாரம் : தட்சிணாமூர்த்தி, குரு பகவான் வழிபாடு, தர்ம, ஆன்மீக காரியங்களுக்கு உதவி.

## துலாம்



ராசியில் கேது குருவின் சாரத்தில், ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 11 இல் லாபஸ்தானத்தில், 4, 5-க்குரிய யோகாதிபதி சனி பகவான் 4 இல், 6இல் 3, 6 குடைய குரு பகவான், 7 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 2, 7 குடைய செவ்வாய் 8 இல் மறைவு, 12 இல் 9, 12 குடைய புதனுடன் பாதகாதிபதி சூரியன் நீண்ட நாள் ஆசைகள் விருப்பங்கள் ஈடேறும் காலம். நவ நாகரீக ஆடம்பர பொருட்களின் சேர்க்கை உண்டாகும். பாதகாதிபதி சூரியனின் மறைவு அரசு வழியில் இழுபறியாக இருந்த வேலைகள் விரைந்து முடியும்.

தன விரையம் கடன்கள் உண்டாகலாம். அனாவசியமாக கடன் வாங்குவது ஜாமீன் கையெழுத்து போடுவது போன்றவற்றை யோசித்து செயல்படுவது நல்லது. சிலர்பழைய வீட்டை வாங்கி புனரமைப்பீர்கள். நீண்டகாலமாக வீடு வாங்கும் எண்ணம் உள்ளவர்களுக்கு பழைய வீட்டை வாங்கி குடியேறுவார்கள். அல்லது தொழிற்சாலை, ஜன நெருக்கடி மிகுந்த பகுதியில் வீடு அமையும். தொழிலாளர்கள், பணியாளர்கள் சற்று சிரமப்பட வேண்டியது வரலாம். மாணவர்கள் நிதானமாக இருப்பார்கள் எனினும் நினைத்த பலனை அடைவர். கணவர் வழியில் உதவிகள் உண்டு. நினைத்த காரியங்கள் தடை தாமதத்திற்கு பிறகு நிறைவேறும்.அரசு ஊழியர்கள் வேலை மாற்றம் நிகழும். குடும்பத்தில் சிறு சலப்புகள் உருவாகலாம். பொறுமை அவசியம். பரிகாரம்: சுப்பிரமணியர், விநாயகர் வழிபாடு, இளையவர்களுக்கு உதவி.

## விருச்சிகம்:



ராசியாதிபதி செவ்வாய் ராசிக்கு 7 இல் இருந்து பார்வை, 2, 5 குடைய குரு பகவான் 5 இல் இருந்து ராசியை பார்க்கிறார், 3, 4 குடைய சனிபகவான் 3 இல், 6 இல் ராகு பகவான் 7, 12 குடைய சுக்கிரன் சாரத்தில், 9 இல் யோகாதிபதி சந்திரன் அவரே பாதகாகிபதியும் ஆகிறார். 10 இல் சுக்கிரன், 11இல் 8, 11 குடைய புதனுடன் 10 ஆம்

அதிபதி சூரியன், 12இல் குருவின் சாரத்தில் கேது பகவான் தொழில் வருமானம் உயரும் செல்வாக்கு சொல்வாக்கு அதிகரிக்கும். வேலை தேடுபவர்களுக்கு உரிய வேலை கிடைக்கும் அரசு பணி, சீருடை பணியாளர்கள் சிறப்புறுவர். தொழிலாளர்கள் நிலை சற்று கடினமாக இருக்கும். வீடு வாகன வசதிகள் ஏற்படும். அரசு வழியில், தந்தை மற்றும் மூத்தோர் வழியில் உதவிகள் உண்டு. தாயார் உடல் நிலையில் கவனம் தேவை. குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்குவர். எதிர்பார்த்த முன்னேற்ற செய்திகள் வரும். கணவர் மனைவி இடையே அனுகூலமான நிலை நீடிக்கும். சிலர் குல தெய்வ வழிபாடு செய்வார்கள். அரசியல்வாதிகள், அரசு துறை சார்ந்தவர்கள் ஆதாயம் பெறுவார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு மருத்துவ செலவுகள் உண்டாகலாம். துணையின் உடல் நலனில் அக்கறை தேவை. சிலர் மருத்துவ செல்வுகளை எதிர்கோள்ள வேண்டிவரும். தொழில் முறை பயணம் உண்டு. மாமனார் மாமியார் வகையில் ஆதாயம் பொருள் சேர்க்கை சிலருக்கு ஏற்படும்.

பரிகாரம்: விநாயகர், தட்சிணாமூர்த்தி வழிபாடு. ஏழை பிராமணர், தர்ம, ஆன்மீக காரியங்களுக்கு உதவி.

## தனுசு:



ராசிக்கு கேந்திரத்தில் ராசியாதிபதி குரு தன் சுய வீட்டில், இரண்டில் 2,3 க்குரிய சனி பகவான், 5 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 6 இல் 5 மற்றும் 12 கூறிய செவ்வாய், 9 இல் 6, 11 க்குரிய சுக்கிரன், 10 இல் பாதகாதிபதி உச்ச புதனுடன் யோகாதிபதி சூரியன், 11 இல் கேது குருவின் சாரத்தில் வீடு, வாகன சுக சௌகரியங்கள் கூடும். ஆன்மீக பெரியவர்களின் சந்திப்பு நிகழும். தனிமையில் இனிமை காணிப்பீர்கள். தொழில், குடும்ப நிலவரம் சீராக செல்லும். தாயாரின் ஆரோக்கியம் சீர்படும். குடும்ப மூத்தோர்களின் ஆசிகள் உண்டு.

கணவன் மனைவி இடையே இணக்கமாக நிலை நீடிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மேல்படிப்பு முயற்சிப்பவர்கள் விரும்பிய துறையை தெரிந்தெடுப்பார்கள். திரு மண சுப நிகழிச்சிகளில் பங்கு பெறுவீர்கள். அரசு வழி காரியங்கள் வெற்றியடையும். அரசு துறை சார்ந்த பணியாளர்கள் உயர்வு பெறுவார். வியாபாரிகள் மற்றும் தொழிலாளர்கள் லாபமடைய கடுமையாக உழைக்க வேண்டியவரும். அடிக்கடி டென்சன் கோவம் தலை தூக்கும் பொறுமை காக்க வேண்டும். சிலருக்கு நீண்டகால முதலீடு, நிலம் மனை வாங்கும் வாய்ப்புகள் அமையும்.

தந்தை வழியில் சுக சௌகர்ய விஷயங்கள் நடைபெறும். அரசாங்க ஒப்பந்த தாரர்கள், அரசியல் வாதிகள் ஆதாயமடைவர். 19 மற்றும் 20 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது. 22, 23 தேதிகள் நலமளிக்கும்.

பரிகாரம்: சுப்பிரமணியர் வழிபாடு, ஸ்ரீவெங்கடேச பெருமாள் வழிபாடு, ஆடு, கோழி, கால்நடைகளுக்கு உண வளித்தல்.

## மகரம்:



ராசியாதிபதிசனி ராசியில், ஜென்ம சனி. 12, 3குடைய குரு 3 இல், 4 இல் சுக்கிரன் சாரம் பெற்ற ராகு பகவான். 4, 11குடைய செவ்வாய் 5 இல், 7 இல் சந்திரன், 8 இல் 5, 10 க்குரிய யோகாதிபதி சுக்கிரன், 9 இல் 6, 10 குரிய புதனுடன் 8 ஆம் அதிபதி சூரியன், 10 இல் கேது குருவின் சாரத்தில் தொழில் வியாபாரத்தில் தடைகள், தாமதங்கள் உண்டாகும். புதிய திட்டங்களை சிறிது காலம் தாமதிப்பது நல்லது. அரசு வழி காரியங்கள் தடைபடும். படிப்பில் பிள்ளைகள் நாட்டம் குறையும்.

சிறிது காலத்திற்கு பிறகு நிலைமை சீராகும். மாணவ, மாணவிகள் மனதை நிலைப்படுத்தி படிப்பில் கவனமாக இருக்க வேண்டும். திடீர் ஆடை, ஆபரணப் பொருட்கள் சேர்க்கை உண்டு. தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம் உண்டு. தந்தையிடம் வீண் வாக்கு வாதங்களை தவிர்க்கவும். பெண்கள் பணிகளில் உரிய அங்கீகாரம் பெறுவார்கள். புதிய முயற்சிகளுக்காக சிலர் நீண்டகால கடன்கள் வாங்க நேரிடும். நன்கு யோசித்து செயல்படவும்.

சீருடை பணியாளர்கள் விரும்பிய எண்ணங்கள் ஈடேறும். சிறு சிறு உல்லாச பயணங்கள் சென்று வருவீர்கள். சகோதர வழியில் ஆதரவு ஆதாயம் உண்டாகும். தொழிலாளர்கள் உழைப்புக்கேற்ற பலன்கள் கிடைப்பதில் தடை தாமதம் உண்டாகும். ஜீரண உறுப்புகள் சம்பந்தமாக கோளாறுகள் சிலருக்கு வந்து போகும்.

சிலர் தொழில் முறையில் விமான பயணம் மேற்கொள்வர். 23, 24 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ மஹாலக்ஷ்மி வழிபாடு, சுமங்கலி மற்றும் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு உதவி.

## கும்பம்



ராசியாதிபதி சனி பகவான் ராசிக்கு 12 இல் ஏழரை சனி நடப்பில் உள்ளது. 11, 2 குடைய இலாப மற்றும் தன காரகன் குரு பகவான் 2 இல். 3 இல் ராகு பாதக மற்றும் யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 4 இல் 3, 10 க்குரிய செவ்வாய், 6 இல் சந்திரன், 7 இல் 4, 9 குடைய சுக்கிரன், 8 இல் 5, 8 குடைய புதன் 7 ஆம் அதிபதி சூரியனுடன் 8 இல், 9 இல் கேது குருவின் சாரத்தில் தொழில், குடும்ப நிலவரம் குருவின் அருளால் தடையின்றி நடக்கும். சாதக, பாதக காரியங்கள் மாறி மாறி நடக்கும் எனினும் எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைக்கப்பெறுவீர்கள். வீண் பண விரயங்களை தவிர்க்க, நீண்ட கால முதலீடுகளில், நிலம் மனைகளில் பணத்தை முதலீடு செய்து வைப்பது நல்லது. உல்லாச பயணங்கள் உண்டு. கோவம், டென்ஷனை கட்டுப்படுத்த வேண்டும். வெள்ளி, தங்க ஆபரண சேர்க்கை ஏற்படும். வேலை தொழிலில் சீருடை பணியாளர்கள் சிறப்புறுவர். அரசியல் வாதிகள் ஆதாயம் அடைவர். குல தெய்வ மற்றும் சித்தர் வழிபாடு செய்வீர்கள். மாணவர்கள் படிப்பில் மந்த நிலை நீடிக்கும் விருப்பம் குறையும் கோபம் ஏற்படும். மூத்த சகோதர வழியில் உதவிகள் உண்டாகும். தந்தையிடம் மனத்தாங்கல் உண்டாகலாம். பொறுமை அவசியம். தாயாருக்கு உஷ்ண சம்பந்த மான தொந்தரவுகள் உண்டாகலாம். அரசு காரியங்கள் தாமதப்படும். 25, 26 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். பரிகாரம்: ஸ்ரீ சத்ய நாராயணர், வெங்கடேஸ்வரர் வழிபாடு. பௌர்ணமி பூஜை, மாணவர்களுக்கு உதவி.

## மீனம்



ராசியாதிபதி குரு ராசியில், இரண்டில் 3, 8 குடைய சுக்கிரன் சாரம் பெற்ற ராகு. 3 இல் 2, 9 குடைய செவ்வாய், 5 இல் யோகாதிபதி சந்திரன், 6 இல் 3, 8 குடைய சுக்கிரன், 7 இல் 4, 7 குடைய பாதகாதிபதி புதனுடன் 6 குடைய சூரியன், 8 இல் குருவின் சாரம் பெற்ற கேது குடும்ப நிலை சீராக இருக்கும், நீண்டகால ஆசைகள் ஈடேற காலம் கைகூடும்.

வண்டி வாகன வகையில் செலவுகள் ஏற்படும். பிரயாணத்தில் கவனம் தேவை. நீண்டகால திட்டங்களை, முதலீடுகளை சிறுது காலம் தள்ளிபோடவும். நீண்ட கால கடன்களை தவிர்க்கவும். இளைய சகோதர வகையில் ஆதரவு அனுகூலம் உண்டாகும்.

தாயாருக்கு அரசு வழி உதவிகள் கிடைக்கும். உடன் பிறந்த சகோதரிகளின் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள் அதற்கான சுப விரயங்கள் உண்டு. மாணவர்கள் கல்வியில் மேம்படுவர். விரும்பிய துறையில் படிப்பை தேர்வு செய்வார்கள். தந்தையின் ஆரோக்கியம் மேம்படும்.

மூத்த சகோதர்கள் மற்றும் நண்பர்களின் உதவி கிடைக்கும். சீருடை பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை மேம்படும். அரசு சார்ந்த விஷயங்கள் கால தாமதமாகும். வார ஆரம்பத்தில் புதிய முயற்சிகள் பலனளிக்கும். மாத கடைசி வாரத்தில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். துணைவரின் தந்தை உடல் நலன் பாதிக்கப்படலாம்.

பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு, தர்ம மற்றும் ஆன்மீக காரியங்களுக்கு உதவு. ஏழை மாணவர்களுக்கு உதவி.


● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# ஹோமங்களில் பயன்படுத்தும் பொருட்களின் பலன்கள்

ஹோமம் நடைபெறும் போது போடப்படும் திரவியங்களின் விபரமும், அதனால் கிடைக்கும் பலன்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விளாம்பழம் | நினைத்த காரியம் ஜெயம் |
| கொப்பரைத் தேங்காய் | சகலகாரிய சித்தி |
| இலுப்பைப்பூ | சர்வ வஸ்யம் |
| பாக்குப்பழம் | ரோக நிவர்த்தி |
| மாதுளம்பழம் | வாக்குப் பலிதம் |
| நாரத்தம்பழம் | திருஷ்டிதோஷ நிவர்த்தி |
| பூசணிக்காய் | சத்ருநாசம் |
| கரும்பு துண்டு | நேத்ர ரோக நிவர்த்தி |
| பூசணி, கரும்பு துண்டு | சத்ருநாசம், எதிலும் வெற்றி |
| துரிஞ்சி நாரத்தை | சகல சம்பத் விருத்தி |
| எலுமிச்சம்பழம் | சோகநாசம் (கவலை தீர்த்தல்) |
| நெல் பொரி | பயம் நீக்குதல் |
| சந்தனம் | ஞானானந்தகரம் |
| மஞ்சள் | வசீகரணம் |
| பசும்பால் | ஆயுள் விருத்தி |
| பசுந்தயிர் | புத்ர விருத்தி |
| தேன் | வித்தை, சங்கீத விருத்தி |
| நெய் | தனலாபம் |
| தேங்காய் | பதவி உயர்வு |
| பட்டு வஸ்திரம் | மங்களப் பிராப்தி |
| அன்னம், பசஷணம் | சஞ்சலமின்மை, சந்தோஷம் |
| சமித்துக்கள் | அஷ்ட ஐஸ்வர்யம் |

சௌபாக்ய திரவியங்கள், பட்டுப்புடவை, பட்டுத் துண்டு, குங்குமச்சிமிழ், சீப்பு, மஞ்சள், புஷ்பம், எலுமிச்சம்பழம், வெற்றிலை பாக்கு, நெத்துக் காய், கிராம்பு, லவங்க சாமான்கள், ஸ்ரீ அஷ்ட லசஷ்மி கடாசஷம் பெறவும், தீர்க்க சுமங்கலி பிராப்தி பெறவும் அருள் புரிகிறது.

பரிகாரங்களில் மிக சிறந்து விளங்குவது ஹோமங்கள் ஆகும்.

www.aanmeegamalar.com



# சரும பிரச்சனைகளை தீர்க்கும் எண்ணெய் கிணறு கோவில்

நாங்குநேரியில் உள்ள வானமாமலைப் பெருமாள் கோவிலுக்கு உள்ளே ஒரு எண்ணெய்க் கிணறு இருக்கிறது. அந்த கிணற்றில் இருந்து எடுக்கப்பட்ட எண்ணையைப் பிரசாதமாக பக்தர்கள் வாங்கிச் செல்கிறார்கள். இந்த எண்ணெய் சகல விதமான சரும ரோகங்களையும் குணப்படுத்தும் என்ற நம்பிக்கை பரவலாக இருக்கிறது.

அந்தக் காலத்தில் குஷ்டரோகிகள் கோவிலின் ஒரு புறம் வந்து நிற்பார்கள். அவர்களுக்கு இந்த எண்ணெய் பிரசாதம் விநியோகிக்கப்பட்டு வந்தது. இந்த எண்ணெய்யை உடலில் தேய்த்துக் கொண்டு நாளடைவில் குணமடைந்து செல்வார்கள்.

இந்தக் கிணற்றில் எண்ணை எப்படி வந்தது? தினந்தோறும் வானமாமலை தோதாத்திரி பெருமாளுக்கு சுத்தமான நல்லெண்ணெயும் இதர வாசனை திரவியங்களும் கலந்து அபிஷேகம் செய்யப்படுகிறது. சில நாட்களில் பக்தர்கள் வேண்டிக் கொண்டால் ஒரு கோட்டை எண்ணைக் காப்பும் செய்யப்படுகிறது. (ஒரு கோட்டை என்றால் 180 லிட்டர் ஆகும்).

இவ்வாறு அடிக்கடி அபிஷேகம் நடக்கிறது. காப்பு அல்லது அபிஷேகம் செய்யப்படும் எண்ணை ஒரு தொட்டியில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து இந்த கிணற்றில் கொண்டு விடப்படுகிறது. பெருமாளின் திருமேனியில் பட்டு வந்த இந்த எண்ணையானது எவ்வளவு நாளானாலும் கெட்டுப் போகாமல் இந்த திறந்த கிணற்றில் ஒருவித சுகந்தத்தோடு இருக்கிறது.

இந்த எண்ணெயை உட்கொண்டாலும் இனிப் பாக இருக்கும். இந்த எண்ணையை மருத்துவ குணம் கொண்ட தைலமாக மாற்றிப் பாதுகாக்கும் அகத்திய முனிவர் இந்த கிணற்றின் வாயி லேயே இருக்கிறார்.

இந்த தலம் ஒரு ஸ்வயம் வ்யக்த க்ஷேத்திரம். அதாவது பெருமாள் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொண்ட இடம். ஏரி மண்ணில் புதையுண்டு இருந்த அவர் 1600 ஆண்டுகளுக்கு முன் வெளியில் எடுக்கப்படும் போது தலையில் காயம் பட்டு ரத்தப்ரவாகம் ஏற்பட்டது.



தோண்டியவர்கள் பயந்து போய் பெருமாளை வேண்ட அவரும் தினமும் எனக்கு எண்ணை சாத்துங்கள் என்று நியமித்து அருளினார். அன்று முதல் எத்தனையோ வருடங்களாக பெருமாளுக்கு நித்யம் எண்ணைத் திருமஞ்சனம் நடக்கிறது.

இதுபோல இந்தியாவில் எட்டு சுயம்பு தலங்கள் இருக்கின்றன. திருவரங்கம், திருப்பதி, ஸ்ரீமுஷ்ணம், வானமாமலை என்கிற நாங்குநேரி இவை நான்கும் தென்னிந்தியாவிலும் பத்ரி காஸ்ரமம் முக்திநாத் புஷ்கர் நைமிசாரண்யம் என்று நான்கும் வட இந்தியாவிலும் இருக்கின்றன.



ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# மலச்சிக்கல், எலும்பு சார்ந்த பிரச்சனை இடுப்பு வலி, கழுத்துவலி, முதுகுவலி அனைத்தையும் தீர்க்கும் ஒரே ஆசனம்

மலச்சிக்கலை_குணப்படுத்த இந்த பயிற்சியை வெறும் 10 நொடிகள் செய்திடுங்க..

இன்று பலரும் அவதிப்படும் முக்கிய நோய்களுள் மலச்சிக்கலை ஒன்றாகும். இது வந்தாலே பலரும் அவதிப்படுவதுண்டு. மலச்சிக்கலை எளிதில் போக்க நம் முன்னோர்கள் கையாண்டு வந்த சில எளிய உடற்பயிற்சிகளை செய்தாலே போதும்.

இந்தவகையில் மலாசனம் வைத்து மலச்சிக்கலை எளிதில் போக்க முடியும் என்று சொல்லப்படுகின்றது.

அதாவது, "மாலா" என்றால் "மாலை" என சமஸ்கிருதத்தில் பொருள்படும். எனவே, மாலை போன்ற நிலையில் உட்கார்ந்து இதை செய்ய வேண்டும்.

தற்போது இந்த மலாசனத்தை எப்படி செய்வது என்று பார்ப்போம்.

## பயிற்சிமுறை

முதலில் காலை நன்றாக விரித்து வைத்து கொள்ளவும். அடுத்து பாதி உட்காரும் நிலைக்கு வர வேண்டும்.

அதன் பின்னர் கைகளை குவித்து வணக்கம் வைக்க வேண்டும். சுருக்கமாக சொல்ல போனால் பாதி உட்கார்ந்து மலம் கழிக்கும் நிலையில் இருந்து கொண்டு இந்த ஆசனத்தை செய்ய வேண்டும்.

இந்த ஆசனத்தில் 10 நொடிகள் வரை இருக்கவும்.

அதோடு இந்த ஆசனத்தை ஒரு நாளைக்கு 8 முதல் 10 வரை செய்து வரலாம்.

ஒவ்வொரு முறை செய்த பின்னரும் மூச்சை நன்றாக இழுத்து வெளியே விடவும். இந்த பயிற்சியினால் எண்ணற்ற நன்மைகள் உடலுக்கு கிடைக்கும்.

இந்த ஆசனத்தை தொடர்ந்து செய்து வந்தால் எலும்பு சார்ந்த பிரச்சினைகள் கண்டிப்பாக ஏற்படாது.

உங்களின் நடு முதுகு மிகவும் பலமாக இருக்கும். மேலும், கழுத்து வலி, இடுப்பு வலி போன்றவற்றால் அவதிப்படுவோருக்கு இது சிறந்த தீர்வாகும்



மாதம் தோறும் 2 புத்தகங்கள்




e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# விஷேச சிறப்பான அத்வைதமே விசிஷ்டாத்வைதம் ஆகும்

ஸ்ரீ வைஷ்ணவத்தின் முக்கிய தூண்களில் ஒருவரான நம்மாழ்வார் வணக்கும் துறைகள் பலப்பலவாக்கி மதிவிகற்பால் பிணக்கும் சமயம் பலப்பலவாக்கி என்று திருவிருத்தத்தில் சொல்வார். அவருடைய கூற்றுப்படியே உலகில் பல மதங்கள் இருந்தாலும் நமது இந்தியா வை பொறுத்தவரை மதங்கள் என்பது இரண்டு வகைப்படும்.

ஒன்று வேதங்களை சத்தியப்ரமானமாக ஏற்றுக்கொள்ளும் வைதீக மதங்கள்.

இரண்டு வேதங்களை ஏற்றுக் கொள்ளாத அவைதீக மதங்கள்.

வைதீக மதங்களில் மிகவும் முக்கியமானது இந்துமத சம்ராதய தர்மங்களில் கண்களை போன்றது ஸ்ரீ வைஷ்ணவம் என்பது உலகோர் அறிந்த உண்மை செய்தியாகும்.

ஊனக் கண்களால் நேருக்கு நேராக பார்க்க முடியாமலும் அனுமானத்தாலோ அறிவாலோ அறிந்துகொள்ள முடியாததும் பரப்பிரம்மம் என்று சதுர்மறைகள் சொல்கின்றன. அத்தகைய பரம்பொருளை வார்த்தைகளால் விளக்க முயன்று எழுந்த ஆன்மிக கருவூலங்களே வேதங்களாகும்.

**கடவுள் உருவாக்கிய மதம்**

வேதங்களை எதிர்க்கும் சார்வாக, சமண, பௌத்த மதத்தினரை பாஹ்யர் என்று அதாவது புறச்சமயத்தார் என்று அழைப்பதும், மரபு வேதங்களை ஏற்றுக்கொண்டாலும் அவைகளுக்கு சரியான விளக்கத்தை எடுத்துக்கொள்ளாமலும் மனம்போனப் படி வழிபாட்டு முறைகளையும் ஆன்மிக பாதைகளையும் வகுத்து கொள்பவர்களை குத்துருஷ்டி அதாவது மாறான பார்வை உடையவர் என்று அழைப் பது வைதீக மரபாகும்.

வேதம் கர்மகாண்டம் ப்ரஹம காண்டம் என்று

இரு வகுப்பாக உள்ளதுஅதாவது பூர்வ பாகம் என்ற முதல்பகுதி கர்ம காண்டம் என்றும், உத்ரபாகம் என்ற கடைசி பகுதி ப்ரஹம காண்டம் என்றும் வழங்கப்படுகிறது.

பிரம்மாகிய பகவானுக்கு ஆராதனை ரூபமாகிய வேள்வி முதலிய கர்மங்களை விஷேசமாக விவரித்து கூறுவது கர்மகாண்ட பகுதியாகும். அந்த வேள்வியில் வணக்கப்படும் ஆதிபகவான் ஆன இறைவனின் இயல்புகளையும் நலங்களையும் திருவடிவங்களையும் விவரித்து விளக்கமாக சொல்லும் பகுதி ப்ரஹம காண்டம் என்று வழங்கப்படுகிறது இந்த பகுதியே உபநிஷத் என்ற புகழ்பெற்ற பகுதியாகும்.

உபநிஷத் என்ற சொல்லுக்கு பரம்பொருளின் அருகில் இருப்பது என்பது பொருளாகும் வேதச்ச ஸர்வை அஹமேவ வேத்ய என்று கீதையின் சொல்படி கர்ம காண்டம் என்பது சிறந்தது உயர்ந்தது என்றாலும் அதுவும் இறைவனுக்கு மிக அருகாமையில் உள்ள அல்லது பக்தனை மிக அருகாமையில் அழைத்து செல்ல வல்லது என்றாலும் உத்ரகாண்டத்திற்கு மட்டும் உபநிஷத் அதாவது இறைவனுக்கு அருகாமையில் உள்ளது என்ற விசேஷ பெயர் எதற்காக வர வேண்டும் என்று யோசிக்கும் போது ஒரு உண்மை நமக்கு தெளிவாக தெரிகிறது.

வேள்வி பூஜை முதலிய சத்கர்மங்கள் பகவானை வழிபடும் பொருளாகவும் ஞான விசாரம் என்ற ஆத்ம விசாரத்தை தருகின்ற உபநிஷத் போன்ற தத்துவ விளக்கங்கள் பகவானோடு தோழமை பாராட்டுவது போல் அமைந்துள்ளதால் பகவானுக்கு அருகில் உள்ளது என்ற சிறப்பு பெயரை தாங்கி இருக்கிறது என்று உறுதியாக சொல்லலாம்.

பூஜை புனஸ்காரம் மற்றும் யாகங்கள்செய்யும் போது சில சந்தேகங்கள் மனித மனதில் எழுவது இயற்கை அந்த சந்தேகத்தை நிவர்த்திக்க ஜைமினி என்ற மகரிஷி பதினாறு அத்தியாயங்கள் கொண்ட ஒரு சாஸ்திரத்தை இயற்றி உள்ளார்.

அதற்கு பூர்வ மீமாம்சை என்பது பெயராகும் இதை போல உபநிஷத் போன்ற தத்துவ விஷயங்களை கருத்தூன்றி படிக்கும் போது சந்தேகம் எழலாம் அந்த சந்தேகத்தை போக்க வியாசர் நான்கு அத்தியாயங்கள் கொண்ட ஒரு சாஸ்திரத்தை வடிவமைத்து உள்ளார்.

அதற்கு பெயர் சாரீரக மீமாம்சை என்பதாகும் இதை உத்திர மீமாம்சை என்று அழைப்பாரும் உண்டு. இந்த சாஸ்திரத்தை தான் ஆதிசங்கர பகவத்பாதாள் போன்ற அத்வைதிகள் பிரம்ம சூத்திரம் என்று அழைக்கிறார்கள்.

இந்த பிரம்ம சூத்திரத்தில் ஒவ்வொரு அத்தியாயத்திலும் நான்கு பாதங்கள் உண்டு எனவே அத்தியாயத்திற்கு நான்கு வீதம் நான்கு அத்தியாயத்திற்கும் சேர்த்து பதினாறு பாதங்கள் கொண்டது பிரம்ம சூத்திரமாகும் இதில் ஒவ்வொரு விஷயத்தையும் தனித்தனியாக



எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து விஷயங்களை நிலைநிறுத்துவதற்கு அதிகரணம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது அப்படி பட்ட அதிகரணங்கள் பிரம்ம சூத்திரத்தில் நூற்றி ஐபத்து ஆறு உள்ளன.

தத்துவங்களின் உண்மை இயல்பைஅறிந்து கொள்ளவும், உலக பொருள்களில் பகவத் தன்மையானது எந்த வகையில் பதிந்துள்ளது என்பதை புரிந்து கொள்ளவும் உபநிஷதங்களை விட்டால் வேறு வழி இல்லை. அத்தகைய உபநிஷத்களின் பொருளை ஐயம்திரிபுகள்

இல்லாமல் மிக தெளிவாக சொல்வது பிரம்ம சூத்திரம் மட்டுமே என்று வேதாந்திகள் அடித்தும் சொல்கிறார்கள்.

பிரம்ம சூத்திரம் என்பது சூத்திர வடிவில் அதாவது ஏறக்குறைய திருக்குறள் போல குறைவான வார்த்தைக்குள் நிறைவான பொருளை கொண்டிருப்பதனால் சாதரண அறிவு படைத்த சராசரி மனிதனால் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகும் அந்த கடினத்தை போக்க அறிவில் முதிர்ச்சி பெற்ற சான்றோர்கள் பலர் விளக்க உரை தந்திருக்கிறார்கள் இந்த விளக்க உரைக்கு வைதீக பரிபாஷையில் பாஷ்யங்கள் என்பது பெயராகும். இப்படி பிரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யங்கள் எழுதியதில் புகழ் வாய்ந்தவர்கள் சங்கரர்,இராமானுஜர்,மத்வர் போன்ற அவதார புருஷர்களாகும்.

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

சங்கரரின் விளக்கம் அத்வைதம் என்றும் மத்வரின் விளக்கம் துவைதம் என்றும் ஸ்ரீ இராமனுஜரின் விளக்கம் விசிஷ்டாத்வைதம் என்றும் அழைக்கப்படுகிறது இந்த விசிஷ்டாத்வைத தத்துவமே ஸ்ரீ வைஷ்ணவத்தின் அஸ்திவாரம் என்று சொல்லலாம்.

துவைதம் என்ற வார்த்தைக்கு பேதம் என்று பொருள் எனவே பேதம் இல்லாததை அத்வைதம் என்று அழைக்கவேண்டும் என்ற விதி ஏற்படுகிறது. அத்வைதம் என்ற பதத்தோடு விசிஷ்ட என்ற பதத்தை சேர்த்தால் விசிஷ்டாத்வைதம் அதாவது விஷேசமான சிறப்பான அத்வைதம் என்று இதற்கு பொருள் சொல்லலாம்.

அதாவது சேதனங்கள்என்ற தன்னுணர்வு கொண்ட பொருள்களும் அசைதேனங்கள் என்ற தன்னுணர்வு இல்லாத பொருள்களும் பரப்பிரம்மம் தன்னோடு கொண்டுள்ளது என்பதையே விசிஷ்டாத்வைதம் என்ற வார்த்தைக்கு நிஜ பொருளாகும்.

இந்த உலகம் என்பதே ஒரு மாய தோற்றம் தான் பிரம்மத்தின் நிழல்



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

அவித்தை என்ற மாயையில் விழுவதால் இல்லாதது இருப்பது போல் தோன்றுகிறது உண்மையில் பிரம்மத்தை தவிர வேறு எதுவுமே இல்லை என்பது அத்வைத தத்துவத்தின் ஆதர சுருதியாகும்.

இதற்கு முற்றிலும் மாறுபட்டு பகவான் என்று ஒருவன் இருக்கிறான் அவனிடம் இருந்து தனியாக பிரிந்து உயிர்கள் இருக்கின்றன எனவே இந்த உலக தோற்றமே இரண்டு என்று துவைதம் சொல்கிறது ஆனால் உயிர் ஜடம் இவை இரண்டையும் விட்டு பிரியாத அல்லது இவை இரண்டையும் தனது சரீரமாக கொண்ட பிரம்மம் மூன்றாவதாக இருக்கிறது என்று விசிஷ்டாத்வைதம் மிக தெளிவாக பறைசாற்றுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com







இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்







# தில்லி ஸ்ரீ சங்கடஹர கணபதி ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம்

இறைவன் அருளாலும், ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களின் ஆசியுடனும், அனைத்து பக்தர்களின் ஆதரவுடனும், தில்லியில் உள்ள ஸ்ரீ சங்கடஹர கணபதி மற்றும் கோவிலின் அனைத்து கோஷ்ட தேவதைகளின் ஜீர்ணோதரன ரஜத பந்தன மகா கும்பாபிஷேகம் 7 செப்டம்பர் 2022 புதன்கிழமை அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகத்தை டாக்டர்வைத்திய நாதன் சிவாச்சாரியார் மற்றும் பதினேழு சிவாச்சாரி யார் குழுவினர் நடத்தினர்.

கிழக்கு டெல்லியின் வசுந்தரா என்க்ளேவில் அமைந்துள்ள டெல்லி மேம்பாட்டு ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் கட்டப்பட்ட இந்தகோயில், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, இங்கு வசிக்கும் இறை பக்தர்களால், வசுந்தரா என்க்ளேவ் சர்வேஸ்வர சமாஜ் (VESS) தொடங்கப்பட்டது, இந்த சமாஜ் மூலம் இக்கோவில் நிர்வகிக்கப்படுகிறது.

வேதமந்திரம் முழங்க, தேவதா அனுக்ஜ்யா, யஜமான அனுக்ஜ்ய விக்னேஷ்வர பூஜை, புண்யாஹவச்சனம், மஹா கணபதி ஹோமம், 10,008 ஆவர்த்தி மூல மந்திர ஜபம், நவக்கிரக ஹோமம், மஹாலக்ஷ்மி ஹோமம், நட்சத்திர ஹோமம், நட்சத்திர ஹோமம், 100 நட்சத்திர ஹோமம், வேதமந்திரம் முழங்க, ஹோமங்கள் நடைபெற்றன.

மகா கும்பாபிஷேக நாளான செப்டம்பர் 7ம் தேதி மகா கணபதி பூஜை, லட்சுமி பூஜை, நான்காம் கால பூஜை, ஹோமம், நாடி சந்தானம், ஸ்பர்ஷ ஆஹுதி, த்ரிவ்யா ஆஹுதி, மகா பூர்ணா ஆஹுதி கலசங்கள் புறப்பாடு, ராஜகோபுரம் மற்றும் விமானங்களுக்கு மகா கும்பாபிஷேகம் நடந்தது. சங்கடஹர கணபதி ரஜத பந்தன கும்பாபிஷேகம், தீப ஆராதனை, மகா அபிஷேகம், வெள்ளி கவசம் சஹஸ்ரநாம

அர்ச்சனை, தீப ஆராதன பிரசாதம், மகா அன்னதான நிகழ்வும் நடைபெற்றது..

இந்த கும்பாபிஷேக விழாவிற்கு, ஸ்ரீ காஞ்சி மடம், ஆகஸ்ட் 11 ஆம் தேதி எழுதிய கடிதத்தினை, செப்டம்பர் 7 ஆம் தேதி நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவில், மூத்த உறுப்பினர் கே.ஸ்ரீராம் வாசித்தார்.

இக்கோவிலில், பல்வேறு சமய நிகழ்ச்சிகள், வாராந்திர பாராயணம், தடையில்லா அன்ன தானம், முந்நூறு பேருக்கு அன்னதானம் என, 12 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது.

இந்நிகழ்ச்சியில், கோயில் தலைவர் கே.ராதாகிருஷ்ணன், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலிகள், பெண்கள் தலைமையிலான, தற்போதைய கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் முந்தைய கமிட்டிகள், பக்தர்கள் நன்றி கூறினார்.

இந்த கும்பாபிஷேக விழாவினை சிறப்பாக செய்து கொடுக்க உதவிகரமாக இருந்த அனைத்து ஊழியர்கள், உள்ளூர் கவுன்சிலர்கள், சிவில் ஏஜென்சிகள் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

டெல்லி / என்சிஆர் பகுதியில் அமைந்துள்ள பல் வேறு கோயில்கள் மற்றும் பிற அமைப்புகளின் கமிட்டி உறுப்பினர்களை உள்ளடக்கிய பிரமுகர்களை கோயில் நிர்வாகம் கௌரவித்தது.

இந்த மகா கும்பாபிஷேக தினத்தன்று டெல்லி/தேசிய தலைநகர் பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் இந்த கோவிலுக்கு வருகை தந்து, இறைவனின் அருள் பெற்றனர். இப்பணிக்காக தமிழகத்தைச் சேர்ந்த ஸ்தபதி ஸ்ரீ ராதாகிருஷ்ணன் என்பவரை கோயில் நிர்வாகம் நியமித்தது. மேலும், இந்த மெகா நிகழ்வு முழுவதும் கோயில் வளாகத்தில் நடைபெற்ற அனைத்து பூஜைகள் மற்றும் பல்வேறு ஹோமங்களில் உதவிய கோயில் அர்ச்சகர்கள்: ஸ்ரீ ஜெய் சங்கர் மற்றும் ஸ்ரீ சோமசுந்தரம் ஆகியோரின் சேவைகளை கோயில் நிர்வாகம் பாராட்டியது.

ஆகஸ்ட் 2010 இல் நடைபெற்ற நுதான ஆலய மகா கும்பாபிஷேகத்தின் போது, மூத்த பாஜக தலைவர் ஸ்ரீ எல் கே அத்வானி, அப்போதைய முதல்வர் ஸ்ரீமதி ஷீலா தீட்சித் மற்றும் பல வி.வி.ஐ.பிக்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நொய்டா ஸ்ரீ கார்த்திகேயா கோவில் மகா கும்பாபிஷேகம்

நொய்டா, செக்டார் 62ல் உள்ள ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவிலின் 'அஷ்டபந்தன நூதன ஆலய' மகா கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 21ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நொய்டா ஆணையத்தால் 1000 சதுர மீட்டர் நிலத்தில் கட்டப்பட்ட கோயில், நொய்டாவில் உள்ள வேத பிரச்சார் சன்ஸ்தான் (VPS) என்ற பதிவு செய்யப்பட்ட அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது.




இது முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது. செக்டார் 22ல் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவிலையும் VPS நிர்வகித்து வருகிறது, அதன் 'ஜீரோணதாரன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம்' ஆகஸ்ட் 29 திங்கட்கிழமை நடைபெற்றது.

வேதமந்திரம் முழங்க, 18ம் தேதி முதல் பல்வேறு ஹோமங்கள் துவங்கி, அனுக்யை, ஸ்ரீ விக்னேஸ்வர பூஜை, பிரதான சங்கல்பம், மற்றும் யாகசாலையில் சங்கல்பம், புண்யாஹவச்சனம், மண்டப பூஜை, பிரதான தேவதாக்களின் கலாஆகர்ஷணம், யாகசாலை பிரவேசம்,











வேதிகை பூஜை, தீபாராதனை, மூல மந்திர ஹோமங்கள், தீபாராதனை மற்றும் பிற நிகழ்வுகள் நடைபெற்றது, இதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆகஸ்ட் 21 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து விமானங்களுக்கும் (கோபுரங்கள்) கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அனைத்து தெய்வங்களுக்கும் அபிஷேகம், தீர்த்த பிரசாதம், ஹோம பிரசாதம், பாலிகை, ரக்ஷா பந்தன விசர்ஜனம் ஆகியவை செய்யப்பட்டன. மகா அபிஷேகம் மற்றும் மண்டல பூஜை. பக்தர்கள் 'வெற்றி வேல் முருகனுக்கு ஹரோ ஹரா' என்று கோஷமிட்டபடியும், ஸ்ரீகார்த்திகேயரை போற்றும் வகையில் பல்வேறு பக்திப் பாடல்களும் பாடப்பட்டது.

பூம்புகாரைச் சேர்ந்த ஸ்தபதி ஜி வினோத் மற்றும் அவரது குழுவினர் மற்றும் ஒப்பந்ததாரர் ஸ்ரீ மதன் பண்டிட், நொய்டா ஆகியோர் இந்தப் பணியை முடிக்க கோயில் நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

நிறுவப்பட்ட சிலைகள்: ஸ்ரீ கார்த்திகேயர் (மூலவர்), ஸ்ரீ ஜெய சித்தி விநாயகர், ஸ்ரீ ராமர், சந்திரமௌலீஸ்வரர், ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்மன், ஸ்ரீ நவ கிரகங்கள், சாந்த ஆஞ்சநேயர் மற்றும் பஞ்சலோகத்தில் ஸ்ரீ மஹா பெரியவர்.


எஸ்.வெங்கடேசன்

VPS இன் நிர்வாகம் அதன் இரண்டு அரங்குகளுக்கு மகா பெரியவா மண்டபம், புது பெரியவா மண்டபம், பால பெரியவா மண்டபம் மற்றும் ஸ்ரீ ஸ்ரீ பரம்புஜ்யஸ்ரீ சுதர்ஷனாச்சார்யாஜி மகாராஜ் மண்டபம் என பெயரிடப்பட்டுள்ளது.

இதையொட்டி, அன்னதானம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததுடன், கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

கும்பகோணத்தைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ செண்பதி அவர்களின் மேற்பார்வையில் நாற்பதுக்கும் மேற்பட்ட வேத பண்டிதர்கள் அடங்கிய குழுவினருடன் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீ சங்கர் மற்றும் ஸ்ரீ ஸ்ரீராம் வாத்தியார் ஆகியோர், VPS இன் ஆஸ்தான வாத்தியார்களாக, தினசரி ஹோமங்கள் மற்றும் பூஜைகளை ஏற்பாடு செய்தனர், கோயில் அர்ச்சகர் ஸ்ரீ மணிகண்டன் சர்மாவின் உதவியோடு ஸ்ரீ காஞ்சி மடம், 11 ஆகஸ்ட், 2022 தேதியிட்ட கடிதத்தின் மூலம், மகா கும்பாபிஷேக விழாவை ஆசீர்வதித்தார். மடத்தின் கடிதத்தை VPS மூத்த உறுப்பினர்களில் ஒருவரான S சந்திரசேகர் வாசித்தார்.

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# இறந்த நமது அன்பிற்குரியவர்கள் எங்கே இருக்கின்றனர்?

மதிப்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: "விஞ்ஞானம் எதையும் படைக்கவுமில்லை; புதிதாக கண்டுபிடிக்கவுமில்லை; அது இறைவனிடம் எற்கனவே என்ன இருக்கிறதோ அதைத்தான் வெளிப்படுத்தியிருக்கிறது. நாம் இதன்மீது கவனத்தைச் செலுத்தினால், நான் இன்று பேச இருக்கும் புதிர்களுக்கும் இதே மாதிரியாகத் தீர்வு காண முடியும்."

"நான் இவற்றைப்பற்றி உங்களிடம் பேசும்பொழுது, நான் படித்ததிலிருந்தோ அல்லது கற்றறிந்ததிலிருந்தோ பேசுவதில்லை. ஆனால் மெய்ப்பொருளைப்பற்றிய என்னுடைய சொந்த நேரடி அனுபவத்திலிருந்து கூறுகிறேன். உங்களுக்கு இது அதிசயமாக இருக்கலாம். ஆனால், நான் உங்களிடம் விவரித்துக்கொண்டிருப்பதையெல்லாம் இந்தக் கணத்தில் பார்த்துக்கொண்டேயிருக்கிறேன். ஏன் அப்படி இருக்கக்கூடாது? ஓர் எக்ஸ்ரே இயந்திரம் மூலம் நீங்கள் சரீரத்தின் எலும்புக்கூட்டையும், உடலின் மற்ற எல்லா அங்கங்களையும் பார்க்க முடியும். மனித உணர்வுநிலை நிச்சயமாக எந்த இயந்திரத்தைக்காட்டிலும் மிக மேம்பட்ட அறியும் சக்திகளைக் கொண்டுள்ளது. மூளை இல்லாத ஒரு சிறிய ரேடியோ ஆகாய வெளியை ஊடுருவி பல மைல்கள் தூரத்திலிருந்து ஒலி பரப்பப்படும் செய்திகளைப் பெற முடிகிறது. நமது உணர்வு நிலை மிக நுட்பமாக இசைவிக்க நாம் கறுறுக்கொள்ளும்பொழுது, அது ரேடியோவைவிட மிக அதிகமான கிரகிக்கும் உணர்வுடையதாகிறது. நம்முடைய சரீரத்திற்கும் அதனுடன் அடையாளப்படுத்தப்படும் எல்லா எண்ணங்களுக்கும் பின்னால்தான் இந்த உலகத்துடன் இன்றியமையாதபடி இணைக்கப்பட்டுள்ள சூட்சும அக உலகம் உள்ளது. நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேறும்பொழுது இந்த அக உலகத்தைக் காணலாம்,"




## புறக்காட்சிக்குத் தெரியாத எண்ண உலகம்

குருதேவர் மேலும் தொடர்கிறார்: "நாம் புலன்களால் அறியக்கூடிய ஸ்தூல வெளித்தோற்றங்களையே முக்கியமாகப் பார்ப்பதற்கும் எதிர்ச்செயல் புரிவதற்கும் பழக்கப்பட்டிருக்கிறோம். பெரும்பாலான சமயம் நம்மைச் சுற்றியுள்ள சூட்சும சக்திகளை நாம் அறியாமலேயே இருக்கிறோம். இருப்பினும் நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும் ஒரு குறிப்பிட்ட சூட்சுமமான அதிர்வை உண்டாக்குகிறது. இதனால்தான் நீங்கள் உண்மையில் எப்படிப்பட்டவர் என்பதை மற்றவர்களிடமிருந்து மறைக்க முடியாது என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் தவறு செய்திருந்தால் உங்களுக்கு அது தெரியும். நீங்கள் அதை மறைந்திருக்கிறீர்கள் என்று நினைத்தாலும், தவறு செய்திருக்கிறோம் என்ற உணர்வானது உங்களுடைய எண்ணங்களில் இருக்கிறது. மக்கள் அறிந்து விடுவார்கள். ஏனெனில் அந்த எண்ண அறிவுகள் உங்களுடைய நடத்தையில் எதாவதொரு வழியில் பிரதிபலித்துவிடும். இதே நிலைதான் நல்ல எண்ணங்களுக்கும். நீங்கள் மானசீகமாக 'இறைவா' என்ற

139
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

சொல்லை உச்சரிக்கும்பொழுதும் அந்த எண்ணத்தையே திரும்பத் திரும்ப உள்ளுக்குள் தொடர்ந்து சொல்லும் பொழுதும், அது இறைவனின் சான்னியத்தியத்தை வரவழைக்கும் ஓர் அதிர்வை உண்டாக்குகிறது.”

“எண்ணங்கள் மிக மிக சூட்சுமமாக இருப்பதால், அவற்றை எந்த ஒரு கருவியாலும் பதிவு செய்ய முடியவில்லை. (எண்ணங்களினால் உண்டாக்கப்படும் மூளையின் அலைகள் பதிவு செய்யப்படலாம். ஆனால் எண்ணங்களையே பதிவு செய்ய முடியாது). இதனால்தான் நமக்கு குரல்கள் உள்ளன. அவை நம்முடைய எண்ணங்களை தெரிவிப்பதற்கு நமக்கு உதவுகின்றன. ஆனால் நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைந்து அகத்தே ஆழ்ந்த அமைதியை வளர்த்துக்கொள்டால், நீங்கள் மற்றவர்களுடைய எண்ணங்களை உணர்ந்து கொள்ளவும் தெரிந்து கொள்ளவும் முடியும். நீங்கள் சஞ்சலத்துடனோ அல்லது அமைதியற்றோ இருக்கும்பொழுது உங்களுடைய மன ரேடியோ மிகவும் இசைவு இல்லாமல் இருப்பதனால், அது அவர்களுடைய மனச்செய்திகளை ஏற்றுக்கொள்ளாது. உங்களுடைய உணர்வு நிலை, எப்பொழுதும் புறத்தே ஸ்ரீ சரீரம், ஆசைகள், மற்றவர்கள் என்ன வைத்திருக்கிறார்கள் அல்லது என்ன செய்கிறார்கள் போன்றவற்றில் ஸ்ரீ நிலைபெற்றிருந்தால் உங்களுக்குள்ளும், உங்களைச் சுற்றிலும் நடந்து கொண்டிருக்கும் சூட்சும செயல்பாடுகள் பற்றி அது ஒரு காலமும் அறிந்துகொள்ள முடியாது.”

“ஐந்து புலன்களும் மிகவும் வரம்பிற்குட்பட்டவை. கண்கள் ஒரு குறிப்பிட்ட ஒளி அதிர்வலைகளை மட்டும்தான் பார்க்க முடியும். செவிகள் ஒரு குறிப்பிட்ட வேகஒலி அதிர்வலைகளை மட்டுமே ஏற்றுக்கொள்ள முடியும். மிக அதிகமான வேக அதிர்வலையையோ அல்லது மிகக்குறைந்த வேக அதிர்வலையையோ கேட்க முடியாது. பெரும்பாலானவர்களால் கேட்கமுடியாத இசையை இந்த முழு பிரபஞ் சமும் பரப்பிக்கொண்டே இருக்கிறது. மனிதன், தானேகூட செய்ய முடியாத அற்புதமான காரியங்களைச் செய்யும் கருவிகளைக் கண்டுபிடித்தவன். உருப்பெருக்கி அவனுக்கு ஒரு மேம்பட்ட பலனைக் கொடுக்கிறது. அதன்மூலம் வெறும் கண்ணுக்குப் புலப்படாத அனேக பொருட்களை அவன் பார்க்க முடிகிறது. ரேடியோவானாது, தற்கால கண்டுபிடிப்புகளில் எதையும்விட அதிகமாக உலகத்தைப்பற்றிய அறிவை கிடைக்கச்செய்கிறது! ஆனால் மனிதனின் மனம்தான் உருப்பெருக்கியையும் ரேடியோவையும் சாத்தியமாக்கிய பிரபஞ் சநியதிகளை கண்டுபிடித்தது என்பது ஞாபகத்தில்


அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203



குருப்ரியா

வைத்துக்கொள்ளுங்கள். அந்த மனதின் சக்தியைத்தான் நீங்கள் வளர்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேறும்பொழுது உங்களுடைய பார்வையும், கேட்கும் சக்தியும் உங்களுடைய புலன்கள் ஒவ்வொன்றும் நான் சொல்லும் மிக சூட்சுமமான எல்லா விஷயங்களையும் உணர்ந்துகொள்வதற்கு ஏற்றார்போல் மிகவும் நுட்பமாக்கப்படுகின்றன. அப்போது வரையறுக்கப்பட்ட ஐம்புலன்களால் உணரக்கூடிய ஸ்தூல அதிர்வுகளின் உண்மையான சாரமாகிய எண்ண அதிர்வுகளை நீங்கள் உணரத் தொடங்குவீர்கள்.”

“மற்றவர்களுடைய வெளி பாசாங்குகளை ஊடுருவி அவர்களுடைய எண்ணங்களை நீங்கள் உணரமுடியும். ஆனால் அது அவர்களுக்கு எதிராகும்படி உங்கள் கருத்தை பாதிக்காது. நீங்கள் அவர்களை நன்றாகப் புரிந்துகொள்வதால், அவர்களை மதிப்பிடமாட்டீர்கள். ஒவ்வொரு மனிதனுடைய எல்லா எண்ணங்களையும் ‡ நல்லது மற்றும் கெட்டது ‡ இறைவன் அறிவான். இருந்தாலும் அவன் தன்னுடைய எல்லா குழந்தைகளின்மீதும் ஒரே மாதிரியாகவே அன்பைப் பொழிகிறான். நீங்கள் எப்பொழுதும் ஒரு நீலக்கண்ணாடி வழியாக இந்த உலகத்தைப்பார்த்தால், எல்லாமே நீலமாகத்தான் தெரியும். எனவே நீங்கள் பாரபட்சம் அல்லது வெறுப்பு அல்லது உணர்ச்சிவேகம் என்னும் நீலக்கண்ணாடி வழியாகப்பார்த்தால், நீங்கள் மக்களையோ அல்லது சூழ்நிலைகளையோ அவை உள்ளது உள்ளபடியே பார்க்க முடியாது. இப்படிப்பட்ட உணர்ச்சிகளால் நீங்கள் அமையப் பெற்றவராகிற பொழுது, உங்களுடைய குரல் கடுமையாகிறது, நீங்கள் பகைமையையும் வெறுப்பையும் உணர்கிறீர்கள். ஆனால் நீங்கள் அகத்தே சாந்தமாகவும் சமாதானமாகவும் இருக்கும்பொழுது எல்லோரையும் நேசிக்கிறீர்கள். மேலும் எல்லோருடனும் நட்புமனப்பான்மையுடன் இருப்பதை உணர்கிறீர்கள். இறைவன் அவனுடைய படைப்பிற்காக உத்தேசித்தது இந்த இணக்கத்தைத்தான். மாறிக்கொண்டே இருக்கும் இந்த உலகத்தில் நீங்கள் மாற்றம் இல்லாத தன்மையையும், சீரான மனநிலையையும் வளர்க்க வேண்டும். அப்பொழுது மற்றவர்களுடைய தீய எண்ணங்கள் உங்களுக்குத் தொல்லையையோ அல்லது பாதிப்பையோ ஏற்படுத்தாது. நீங்கள் மனிதர்கள் மற்றும் நாம் வாழுகின்ற இந்த பிரபஞ்சத்தின் உண்மையான, சூட்சுமமான தன்மையை உணர ஆரம்பித்து நான்காவது பரிமாணத்தைப் பற்றிய அதிக விழிப்புணர்வு பெற்றவராவீர்கள்.”

## சுவர்க்கம் எங்கே உள்ளது?

அன்புமிக்க குருதேவர் அருளுகிறார்: “ஆறாவது புலனான உள்ளுணர்வின் மூலமாக மட்டுமே உணர முடிகின்ற உயிர்சக்திகள் நிறைந்த கோளம் (சூட்சும உலகம் இறைவனின் படைப்பான சூட்சும மண்டலமானது அணு ஆற்றல்களைவிட அதிக நுட்பமான ஜீவசக்தியின் அதிர்வலைகளால் அல்ல பரமணுக்களால் ஆக்கப்பட்ட நிறம் மற்றும் ஒளிபிரபஞ்சமாகும்) தான் நான்காவது பரிமாணம். உங்களுடைய புலன்கள் ஆன்மீக ரீதியாக செம்மையாகும்பொழுது, அவை உள்ளுணர்வு திறனை அடைகின்றன. மேலும் நீங்கள் அந்த மறு உலகத்தைப்பற்றி அதிக விழிப்புணர்வு கொள்கிறீர்கள்.



அப்படியெனில் அந்த மறு உலகம் எங்கே இருக்கிறது? அனேகர் அது வெகுதூரத்தில் வானத்தில் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால் இது அப்படி இல்லை. நான்காவது பரிமாணம் சூட்சும உலகம் – சுவர்க்கம் – இம்மண்ணுலகத்தைச் சார்ந்த ஸ்தூல அதிர்வுக்குப்பின்னால்தான் இருக்கிறது. சூட்சும கிரகங்களில் வாழ்க்கையானது சுவாசத்தையோ அல்லது உணவையோ அல்லது பிராண வாயுவையோ

சார்ந்தது அல்ல. இது ஒன்றும் இட்டுக்கட்டிய கற்பனைக்கதை அல்ல. இது என்னுடைய சொந்த அனுபவத்தில் கண்டதாகும். ஆனால் ஒருவன் வாழ்க்கையின் உயர்நிலை ஆற்றல்கள் மற்றும் விதி முறைகளை அனுபவிப்பதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைய வேண்டும். அப்படிப்பட்ட ஓர் உன்னதமான மகாத்மாதான் ஸ்வாமி த்ரைலங்கர். அவர் கங்கையில் நாட்கணக்கில் மிதப்பது வழக்கம். சில சமயங்களில் மணிக்கணக்கில் அல்லது நாட்கணக்கில் நீருக்கடியில் இருப்பது வழக்கம்.

ஏன் அப்படி இருக்க முடியாதா? நீங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொண்டால், அது அதன் ஸ்தூல பாகங்களுக்கும் அப்பாற்பட்டது என்பதை அறிவீர்கள். ஆன்மாவை உணர்ந்த மகான்கள் ஸ்தூல சரீரத்தில் அவதரித்தாலும், மேலுலகங்களின் நியதிகளை அவர்களால் இயக்கமுடியும். நீங்கள் இவற்றை காண்பதில்லையாதலால், இவை உண்மையாக இருக்கமுடியாது என்று நினைக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய அனுபவ எல்லையானது. இறைவனின் படைப்பில் மிகமிக நுண்ணிய பகுதிதான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும்."

இறைவன் இருக்குமிடம்தான் சுவர்க்கம் அல்லது இறைசாம்ராஜியம் எனலாம். இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் முக்கியமாக உலக ஆசைகள் எல்லாவற்றையும் துறந்திருக்க வேண்டும். மேலும் விருப்பு வெறுப்பு அகங்காரம் போன்றவையும் இருக்கக்கூடாது. மிகவும் முக்கியமாக வெறுப்பற்ற பொறுமை வேண்டும். அதற்கு ஒரு உதாரணத்தை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

மகாராஷ்ட்ராவில், ஏகநாதர் என்ற பெயருடைய ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் ஓர் இறைபக்தன். ஒருநாள் அவர் நதியில் சென்று குளித்து விட்டு திரும்பும்போது, நதிக்கரையில் 8, 10 பேர்கள் வெற்றிலை பாக்கு போட்டுமென்னு அந்த எச்சிலை ஏகநாதர் முகத்தில் உமிழ்வதற்காகத் தயாராக நின்றனர். ஏகநாதரைப் பார்த்ததும் அவர் முகத்தில் அனைவரும் வெற்றிலைபாக்கு மென்னுவாயில் வைத்திருக்கும் எச்சிலை உமிழ்ந்தனர்.

பதிலேதும் கூறாமல் உடனே ஏகநாதர் திரும்பச்சென்று நதியில் குளித்துவிட்டு மீண்டும் கரையில் வந்தார். மீண்டும் உமிழ்ந்தனர். மீண்டும் பதில் ஏதும் கூறாமல் நதியிலிறங்கி குளித்துவிட்டு வத்நார். கரையில் நின்றவர்கள் அவர் முகத்தில் மீண்டும் மீண்டும் எச்சில் உமிழ்ந்தனர், இவ்வாறு நூற்றிஎட்டு முறை ஏகநாதர் முகத்தில் அவர்கள் எச்சில் உமிழ்ந்தனர். ஒவ்வொரு முறையும் பதில் ஏதும் கூறாமல் அவர் நதியிலிறங்கிக் குளித்துவிட்டு கரை திரும்பினார். இறுதியில் அவர்கள் ஏகநாதரைப்பார்த்து, "நாங்கள் அனைவரும் இவ்வளவு தடவை உன் முகத்தில் எச்சில் உமிழ்ந்தபோதும் ஏன் எங்கள்மீது உனக்கு வெறுப்பே வரவில்லையா?" என்று கேட்டனர். அதற்கு அவர் "நீங்கள் என் முகத்தில் எச்சில் உமிழ்ந்தபோதெல்லாம் இந்த நதியில் குளித்து நீங்கள் உமிழ்ந்த எச்சிலைக் கழுவிவிட்டு வந்தேன். உங்களுடைய இந்தச் செயலுக்கு நான் உங்கள் மேல் வெறுப்பு வைத்தேன் என்றால் அதை நான் எந்த நதியில் கழுவுவேன்! " என்று கேட்டார், அதைக் கேட்டதும் அவர்கள் அனைவரும் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்தனர்.

வெறுப்பு நம் மனதை ஆக்கிரமித்தால் அதை நதி ஜலத்தால் கழுவ முடியாது. 'தியானம்' என்ற அருள் ஜலத்தால் மட்டும்தான் கழுவ முடியும். எல்லா அழுக்கையும் தியானத்தால் மட்டும்தான் கழுவ முடியும்.

ஒரு மனிதனுக்கு என்னென்ன தேவையோ அவற்றையெல்லாம் குருதேவர் நேர்த்தியாக அருளியுள்ளார். ஒருவன், எவ்வளவு அதிகமாக தன் சம்சாரக்கடமைகளில் ஊன்றியிருக்கிறானோ அது அவனது கர்மா என்று தான் கூறவேண்டும். மிகவும் குறைவாக தன் கடமைகளைச் செய்பவனாக இருந்தால், அதாவது ஒவ்வொரு நாளும் முதலில் இறைவனுக்காக நேரத்தை ஒதுக்கி தியானம் செய்தால் அவனுக்குத் தனது சம்சாரக் கடமைகள் மற்றும் முற்பிறவி வாசனைகள் கர்மாக்கள் ஆகியவை தானாகவே குறையத்தொடங்கும்.

தினமும் தியானத்தால் இறைவனை தொடர்பு கொள்ளும்போது நம் மனதிலுள்ள எல்லா அழுக்குகளும் நீங்கிவிடும். அவன் தனது முதல் கடமையான தியானத்தை ஆழ்ந்து செய்தால் அவன் மற்றகடமைகளிலிருந்து விடுபடுவான். அவ்வாறு செய்ய வைப்பது குருதேவர்தான். பெரிய மகான்களால் மட்டும்தான் அவ்வாறு செய்ய முடியும். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் தமது சீடர்களான நமக்கு செய்து கொண்டிருக்கிறார். அதை நாம் உணர வேண்டும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் ...
















# ஆன்மிக உலகின்
# முதல் இலவச
# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)-ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**உடல் நலம் பேணி காப்போம்**

# பிரச்சனை மேல் பிரச்சனையா?

## பித்ருக்களான நமது முன்னோரை சாந்தப்படுத்துங்கள் தீர்வு கிடைக்கும்



எவ்வளவுதான் சம்பாதிச்சாலும், வாழ்க்கையில் நிம்மதி இல்லைன்னு புலம்புறவங்க நிறையபேர் இப்போ இருக்காங்க. குறிப்பா ஒருசில ஏக்கங்களை சொல்லலாம்.

- கடன் தீராமல் இருப்பது
- நோய் தீராமல் இருப்பது
- தேவையற்ற வம்பு வழக்கில் சிக்கி வாழ் நாளின் பெரும்பகுதி வீணாவது
- ஒற்றுமையில்லாமல் வாழ்ந்து வரும் தம்பதி யினர்
- கொடுத்த பணம் திரும்பி வராமல் இருப்பது
- மனதில் எப்போதும் ஒருவித பதற்றம்
- பூர்வீக சொத்து கிடைக்காமல் இருப்பது
- எல்லாம் இருந்தும் மன நிம்மதியில்லாமல் இருப்பது
- விரும்பிய படிப்பு படிக்க முடியாமல் போவது
- விரும்பிய வேலை அல்லது தொழில் அமை யாமல் போவது
- ஆபத்துக் காலத்தில் கூட உதவிகள் கிடைக்காமல் போவது
- உழைப்பு ஏற்ற வருமானம் கிடைக்காமல் போவது
- திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக் காமல் போய்,வாழ்நாள் முழுவதும் சராசரி வாழ்க்கை வாழ்ந்து வருவது
- முறையான பரிகாரங்கள் செய்தும் தோஷங் கள் தீராமல் போவது
- திருமணம் ஆகாமல் இருப்பது
- திருமணம் ஆகியும் பல ஆண்டுகள் குழந்தை பிறக்காமல் தவிப்பது – அவ மானப்படுவது
- சொந்தவீடு அமையாமல் இருப்பது

இது போன்ற ஒரு சில பிரச்சனைகளும், சொல்ல முடியாத ஒருசில பிரச்ச னைகளாலும் அவதிப்படுப வரா நீங்கள்.

அப்படியென்றால் கண்டிப்பாக உங்களுக்கு பித்ருதோஷம் உள்ளது. பித்ருக்களின் சாபமும் அவர்களின் ஆசியும் இல்லாததால்தான் மேற் கண்ட பிரச்சனைகள் தொடர்ந்து உங்களைதாக்கு கிறது.

இதுமட்டுமல்ல, குடும்பத்தில் அகால மரணம்

அடைந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய செய்ய வேண்டிய பரிகாரங்கள் முழுமையாக செய்யா மல் விட்டாலும், குறிப்பாக இளம்வயதில் அகால மரணம் அடைந்தவர்களின் ஆத்மாவை சாந்தப்படுத்தாமல் விட்டவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்கள் தலைமுறை தலைமுறையாக பிரச்சனை மேல் பிரச்சனை எழுந்து கொண்டே இருக்கும்.

இதற்கெல்லாம் தீர்வுவாகவும், எளிய வழிமுறை யாகவும் விளங்குவது திதி (தர்ப்பணம்) கொடுப் பது மட்டுமே.

நாம் தற்போது பயன்படுத்தும் செல்போனிற்கு எப்படி சிக்னல் ஒரு இடத்திலிருந்து பல ஆயிரம் கிலோ மீட்டரில் இருக்கும் இன்னொருவரை சென்றடைகிறதோ, அதே போன்று திதியின் வாயிலாக நாம் கொடுக்கும் எள், வெண் சாதம் மற்றும் தண்ணீரின் மகத்துவம் நமது முன்னோருக்கு சென்றடைவதால் அவர்களின் ஆசி நமக்கும், நமது குடும்பத்திற்கும் பாதுகாப்பு அரணாக மாறிவிடுகிறது.

இறந்த முன்னோர்களாகிய தாத்தா, பாட்டி; பூட்டன் பூட்டி போன்றவர்களில் ஒரு சிலர் தவிர பெரும்பாலானவர்கள் பித்ருக்கள் உலகத்திற்கு சென்று அங்கேயே வாழ்ந்து கொண்டு இருப்பார் கள்: அவர்களின் மனம் குளிரும் விதமாக, பித்ரு தர்ப்பணம் செய்ய வேண்டி யது நம் ஒவ்வொரு வருடைய கடமை ஆகும்.

அப்படி அடிக்கடி பித்ரு தர்ப்பணம் செய்தால், நமது நியாயமான ஏக்கங்கள் விரைவில் நிறை வேறிவிடும். மாதம் தோறும் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்பவர்களுக்கு பித்ருக்களே பாது காப்பு அரணாக இருப்பார்கள்.

அவ்வாறு முடியாதவர்கள், ஆடி, தை, புரட்டாசி மாதங்களில் வருடம் அமாவாசையன்று தர்ப்பணம் கொடுத்து வந்தால் மிகவும் சிறப்பாகும்.

இது புரட்டாசி மாதம், புரட்டாசி அமாவசை அன்றாவது பித்ரு தர்ப்பணம் செய்ய வேண்டும்;

11.9.2022 ஞாயிற்றுக் கிழமை முதல் 25.9.2022 ஞாயிற்றுக்கிழமை வரை இருக்கும் நாட்கள் மஹாளய பட்சம்!

இந்த நாட்களில் நமது முன்னோர்களாகிய பித்ருக்கள் நமது வீட்டில் இருக்கும்

உரல், அம்மி, முறம், பூஜை அறை, வளர்க்கும் நாட்டுப் பசு, உலக்கை, ஆட்டுக் கல், சந்தனம் அரைக்கும் கல், சந்தனம், செம்புப் பாத்திரங்கள், மூங்கிலில் செய்யப்பட்ட பொருட்கள், துளசி மாடம், பஞ்சவாத்தியம், போன்ற இடங்களில் ஏதேனும் ஒன்றில் கடைசி இரண்டு நாட்கள் அமர்ந்திருப்பார்கள்:



பித்ருக்கள் உலகத்தில் முறையான அனுமதி பெற்று நம் அனைவரது வீடுகளிலும் தங்குவர்;

ஓரளவு தெய்வீக சக்தி உள்ளவர்களின்கண்க ளுக்கு தெரிவர்; பேசுவதும் கேட்கும்; மற்றவர் களுக்கு தெரியாது.

இந்த 16 நாட்களும் பித்ரு தர்ப்பணம் செய்ய வேண்டும்; அதற்கு வசதி இல்லாதவர்கள் தின மும் நாட்டுப் பசுவுக்கு அகத்திக்கீரை அல்லது வாழைப்பழம் தானம் செய்து வந்தால் போதும்.

16வது நாளான 25.9.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும். ஒரே ஒரு புரட்டாசி அமாவாசை அன்று தர்ப்பணம் செய்தால், கடந்த 12 ஆண்டுகள் தர்ப் பணம் செய்த புண்ணியம் கிட்டும்;

25.9.2022 அன்று தர்ப்பணம் செய்தால், 2010 முதல் இந்த வருடம் வரை தர்ப்பணம் செய்யாமல் விடுபட்ட பித்ரு கடனை தீர்த்ததாக அர்த்தம்!!!

25.9.2022 ஞாயிற்றுக் கிழமை அன்று தர்ப்பணம் செய்ய முடியாதவர்கள், அருகில் இருக் கும் பழமையான சிவாலயத்தின் வாசலில் காலை, மதியம், இரவு என்று 3 வேளையும் அன்னதானம் செய்யலாம்; ஒரே ஒரு துறவி அல்லது ஏழைக்கு அன்னதானம் செய்தாலும் போதும்.

பித்ரு தர்ப்பணம் கொடுக்கும் முக்கிய தலங்களில் திருவண்ணாமலை மிக முக்கிய இடம் வகிக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 88 பிதுர் முக்தி ஸ்தலங்கள் உள்ளன.

இவைகளில் உங்களுக்கு அருகிலுள்ள பிதுர் முக்தி ஸ்தலங்களில் மனப்பூர்வமாக உங்கள் முன்னோர்களை எண்ணி தர்ப்பணம் செய்யவும். அதன் பிறகு அன்னதானம் செய்யவும்.

நிச்சயமாக கடன், நோய், எதிரி, வம்பு, வழக்கு, மாந்திரீக பிரச்சனை, குலதெய்வ சாபம், பித்ரு சாபம் அனைத்தும் தீர்ந்துவிடும்.

# ராமனை சோதித்த சுக்ரீவன்

சுக்ரீவனுக்கு ராமனின் வீரத்தின் மேல் சந்தேகம். வாலியை வீழ்த்தும் அளவு வலிமை ராமனுக்கு உள்ளதா எனச் சோதிக்க நினைத்தான். அதனால் ராமனுக்கு ஒரு பரீட்சை வைத்தான். துந்துபி என்ற அரக்கன் முன்னொரு சமயம் வாலியுடன் போர் புரிய வந்தான். அந்த துந்துபியைக் கொன்று அவனது சடலத்தை வாலி தூக்கி எறிந்த போது, அது ரிஷ்யமுக மலையில் சென்று விழுந்தது. அந்தச் சடலம் இருக்கும் இடத்துக்கு ராமனை அழைத்துச் சென்ற சுக்ரீவன், 'ராமா! இது அன்று வாலி வீசி எறிந்த அரக்கனின் சடலம். இப்போது நீ இதை எடுத்து வீசு. நீ எவ்வளவு தூரம் வீசுகிறாய் என்பதைப் பார்த்து, உன் பலத்தையும் வாலியின் பலத்தையும் நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்' என்றான்.

அப்போது லக்ஷ்மணன், 'அண்ணா! உங்கள் இடது திருவடியின் கட்டை விரலால் நெம்பி விடுங்களேன்' என்றான். ராமனும் அப்படியே தன் இடது திருவடியின் கட்டை விரலால், பூமியைக் கடந்து அப்பால் செல்லும்படி துந்துபியின் எலும்புக் கூட்டை நெம்பி விட்டான். அது வாலி வீசிய தூரத்தை விட வெகுதூரம் சென்று வீழ்ந்தது. சுக்ரீவனோ, 'ராமா! என்ன இருந்தாலும் நீ எலும்புக் கூட்டைத்தான் தூக்கி வீசி இருக்கிறாய். வாலி இவன் உயிரோடு இருந்த காலத்திலேயே இவனைத் தூக்கி எறிந்தான். எனவே இந்த ஒரு செயலைக் கொண்டு உன்னால் வாலியைக் கொல்ல முடியும் என்று என்னால் நிச்சயிக்க முடியவில்லை!உனக்கு இன்னொரு பரீட்சை வைக்கப் போகிறேன்' என்றான்.

அருகில் இருந்த வனத்துக்கு அழைத்துச் சென்ற சுக்ரீவன், 'ராமா! வாலி தன் வில்லில் இருந்து பாணம் போட்டால், அது பெருத்த சால மரத்தையே துளைக்கும். அவ்வாறு உன்னால் பாணம் போட முடியுமா?' என்று கேட்டான். ராமன் புன்னகை செய்தபடி தன் கோதண்டத்தில் பாணத்தைப் பூட்டி எய்தான். அது வரிசையாக ஏழு சால மரங்களைத் துளைத்துக் கொண்டு சென்றது. அதை கண்டபின் தான் சுக்ரீவனுக்கு ராமனின் வீரத்தின் மேல் நம்பிக்கை உண்டானது. இவ்வாறு பலவிதமான சாகசங்களைப் புரிந்து தன் பக்தர்களுக்குத் தன் மேல் நம்பிக்கையை உண்டாக்கி அதை வளர்ப்பவராகத் இறைவன் திகழ்வதால் "ப்ரத்யய:" என்றழைக்கப்படுகிறார். அதுவே ஸஹஸ்ரநாமத்தின் 94வது திருநாமம்.

தன்நம்பிக்கையை நாம் இழக்கும் போதெல்லாம் “ப்ரத்யயாய நம:”என்ற திருநாமத்தைச் சொல்லி இறைவனை வணங்கினால், அவர் அருளால் நமக்குத் தன்னம்பிக்கையும் புத்தணர்ச்சியும் உண்டாகும். அது மட்டுமல்ல, 'நான் எதற்காக என்னை நிரூபிக்க வேண்டும்? என்னை நிரூபித்தால் தான் நீ என்னை ஏற்றுக் கொள்வாய் என்றால், அது தேவையே இல்லை' என்று பகவான் ஒருபோதும் நினைப்பதில்லை. காரணம்,



இறைவனிடத்தில், தன்முனைப்பு (மீரீஷீ) இல்லை. அதனால், அவனை இத்திருநாமம் சொல்லி வழிபடும் போது, நமக்கும், தன்முனைப்பு, தன்முனைப்பினால் வரும் அகங்காரம், விருப்பு, வெறுப்பு, போன்றவைகள் அகன்று விடும். மேலும், பகவான், தன்னை நிரூபிப்பது, தன்னை உயர்த்திக் காட்ட அல்ல, பக்தர்களை ரக்ஷிப்பதற்காக, துயர் தீர்ப்பதற்காக. இது பகவானின் காருண்யத்தைக் காட்டுகிறது. அவனின், இத்திருநாமத்தை இப்படியாக பொருள் உணர்ந்து சொல்லும் போது நமக்கும் அந்த ஸ்வபாவம் வந்து சேரும்.

எங்கள் சேவைக்கு உங்களின் உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் ரூ.10 முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள், கீழ்காணும் ஸ்கேனர் மற்றும் வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay

SCAN TO PAY

WITH ANY BHIM UPI APP

Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

Paytm BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**

ACCOUNT NO. 49510100003648

IFSC CODE: BARB0KODAMB

(FIFTH CHARACTER IS ZORO)

BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)

# எண்ணங்கள் சுவையானால் இதயம் மாம்பழமாகிவிடும்

பக்தி இல்லாத மனிதனின் சிந்தனை கரடு முரடு ஆனதே. இதனால் அருள் பெற்ற மனிதனால் மட்டுமே முன்னேற முடிகிறது.

❖ ❖ ❖

“உத்தரவின்றி உள்ளே வா”என்பது உன் மனம் தான். உன்னிடம் மனமிருந்தால் ஆண்டவன் அங்கே நுழைந்துவிடுவான். இதன் பெயரே பக்தி.

❖ ❖ ❖

எள்ளிலிருந்து எண்ணெயைப் பிழிவேன். அதுபோல் கடவுள் எங்கிருந்தாலும் அவனைக் கொண்டு வருவேன் என்று சொல்லுங்கள். ஆண்டவன் உடனே அருள் செய்து விடுவான்.

❖ ❖ ❖

மறைவான பயமே, மனித மனம் இடிந்து விழக் காரணமாய் உள்ளது. இந்த பயத்தை நீக்கு. முன்னேறு.

❖ ❖ ❖

சுரங்கத்தில் இறங்கி, சுரங்கத் தொழிலாளி வேலை செய்வது போல் உன் மனதுள் ஆண்டவன் இறங்கி உன்னை உயர்த்துகிறான். பிறகே நீ ஞானியாக ஆக முடியும்.

❖ ❖ ❖

சமுதாயத்தில் அனாதையாகிவிட்டால் மனிதன் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளுதல் வேண்டும்.

❖ ❖ ❖

நோக்கம் என்பது படகு போன்றது. உலகில் உனக்கு நோக்கம் இல்லை என்றால் உனது நோக்கம் கடவுளையே நோக்கிச் செல்லும்.

❖ ❖ ❖



சமுதயாத்திற்கு மனிதன் உழைக்கலாம். உழைக்காமலும் இருக்கலாம். ஆனால் முடிவு செய்த மனிதனே எதையும் செய்ய முடியும். இதுவே உண்மை.

❖ ❖ ❖

இறைவனின் திருவடியை உணர்ந்து அதனருகில் உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுதே மனிதனுக்கு திருப்தி ஏற்படும்.

❖ ❖ ❖

மகான்களும் மனிதர்கள் தான். சமமமான மனநிலை ஏற்பட்டால் சிந்தனை சமநிலையாகி பின் சித்தம் நிலையாகி மனிதன் மகானாகிறான்.

❖ ❖ ❖

உலகில் எது அவசரம்? எது நிதானம்? என்று தெரிவது தான் ஞானம். உடனே தெளிவு வேண்டும் என்பது அவசரம். இறைவனைப் பார்த்த இடத்தில் சந்தோஷப்படுவது நிதானம்.

❖ ❖ ❖

மிருகங்களுக்கு உதவி செய்தால் மனிதனுக்கு உதவ ஆண்டவன் தானாகவே முன் வருவான்.

❖ ❖ ❖

ஆடு, மாடுகள் வாய் திறந்து பேசாததால் அவைகளுக்கு வாயில்லை என்பார்கள். ஆனால் சாப்பிடும். எல்லா மந்திரங்களும் பலிக்கும். பக்தியின்றி அவைகளை ஜெபித்து வாயில்லா ஜீவன்களாக்காதே.

❖ ❖ ❖

கடவுளின் குரலில் கருணை இருப்பதை இந்த நிமிடம் வரை அறிந்தறிந்து வாழுகிறேன்.

❖ ❖ ❖

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

www.aanmeegamalar.com


மனிதனின் நடைமுறை வாழ்க்கைக்கு கடைசிவரை ஒரு உதவி தேவை. இதை நல்குவோர் மிகப் பெரிய மனிதர்களே.
பாரத நாடு இராமாயணத்தையும், இராமனையும் இப்படியே பார்க்கிறது.

❖ ❖ ❖

பறவைகள், மிருகங்கள், ஜீவராசிகள் இவைகளிடம் கருணை உள்ளவனாய் இரு. பிறகே நீ உன் போன்ற மனிதனிடம் கருணை உள்ளவனாக இருப்பாய்.

❖ ❖ ❖

முதலில் மனிதனாய் இருக்க யோசி. மனிதனாய் இரு. அதுவே போதும். மரணம், பிறவி, மறுபிறவி இவைகளைப் பற்றி யோசிக்காதே. பிறகு பார்க்கலாம். மனிதனாக ஆகாதவனுக்கு இவைகள் ஏதும் பயன்படுவதில்லை.

❖ ❖ ❖

மேகங்கள் பூமியில் மழை பெய்வதற்குக் காரணமாய் உள்ளன. மேகங்களின் தாய் வீடு பூமியே. நீர் இங்கிருந்து ஆவியாகி மேலே சென்று மேகமாவதைக் கவனி. மண்ணுலகம், விண்ணுலகம் இரண்டையும் இணைக்கும் யோகமே விசுத்தி யோகம்.


ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்


❖ ❖ ❖

பக்தி, ஞானம் இவ்வழிகளில் பாவனைக்கு, அதாவது ஒன்றைப் போல் எண்ணுவதற்கு வழி உண்டு.

❖ ❖ ❖

சிந்தனை செய்யும் வழியில் பாவனைக்கு இடமே இல்லை.

❖ ❖ ❖

அணில் பழங்களைத் தின்னும்.
கடவுள் பக்தி ஒன்றையே விரும்புகிறான்.

❖ ❖ ❖

உனது தேகம் ஒரு பெரிய களிமண் மலை என்று கண்ணை மூடிக்கொண்டு எண்ணு. மனமென்னும் விரல்களால் நீயே அதை அழுத்தியழுத்தி குயவனைப் போன்று செய். விசுத்தியில் சுகம் ஏற்பட்டு மூதாதையரின் உருவம் தெரியும்; வந்தும் தங்கும்.

❖ ❖ ❖

சமுதாயப் பணிகளை எண்ணியவுடன் வெறுப்பு வருகிறது என்றால் நீயே சுயநலவாதி.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
மெயில் புக்



# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்














# கங்கை, யமுனை, நர்மதை, சிந்து, காவேரியில் நிராடிய பலன் தரும்

# திருமறைக்காடர் திருக்கோயில்

அருள்மிகு யாழினு இனிய மொழியாள் அம்மன் உடனுறை திருமறைக்காடர் திருக்கோயில்– வேதாரண்யம்

திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டிவழியாக சுமார் 65 கி.மீ. தொலைவிலும், நாகப்பட்டினத்தில் இருந்து தெற்கே சுமார் 50 கி.மி. தொலைவிலும் வேதாரண்யம் உள்ளது.

திருவாரூர், தஞ்சாவூர், கும்பகோணம்,மயிலாடுதுறை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன. இங்கிருந்து 2 கி.மி. தொலைவில் அகஸ்தியம்பள்ளி என்ற மற்றொரு பாடல் பெற்ற ஸ்தலம் இருக்கிறது.

இத்தலம் சப்தவிடத்தலங்களில் ஒன்று.

நெடுங்காலமாக மூடப்பட்டிருந்த கதவினைதிருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் தேவாரம் பாடி திறந்து வைத்தனர்.

இராமர் இவ்விடத்தில் சமுத்திர ஸ்னானம் செய்து இராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்றார் என்று தலப்புராணம் கூறுகிறது.

இக்கோயிலுக்குள் உள்ள மணிகர்ணிகை தீர்த்தத்தில் நீராடினால் கங்கை, யமுனை, நர்மதை, சிந்து, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் நீராடியதற்கு சமம்.

தியாகேசர் சன்னதியில் உள்ள மரகதலிங்கத்திற்கு காலை மாலை இருவேளையும்பூஜை உண்டு. இந்திரன் அளித்து முசுகுந்தன் பிரதிஷ்டை செய்த லிங்கம் இது. அகத்தியருக்குத் திருமணக் காட்சி நல்கிய திருத்தலம்.

கோயில் திருவிளக்கை நன்கு எரியும் வகையில் தூண்டிய எலி மறுபிறப்பில் மகாபலிச் சக்கரவர்த்தியாக பிறக்கும் படி இறைவன் அருளிய திருத்தலம். இத்தலத்தில் வழிபடுவோர்க்கு பாவங்கள் விலகும். நாக தோசம் நீங்கும்.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்

தலங்களில் இது 125வது தலம். சிவனின் தேவா ரப்பாடல் பெற்ற 274 சிவால யங்களில் இது 189 வது தேவாரத்தலம் ஆகும்.

**இறைவர் திருப்பெயர்:** திருமறைக்காடர்,வேதா ரண்யேஸ்வரர்,வேதவனநாதர்,

**இறைவியார் திருப்பெயர்:** வேதநாயகி, யாழினு இனிய மொழியாள்,

**தல மரம்:** வன்னிமரம், புன்னைமரம்,

**தீர்த்தம்:** வேததீர்த்தம் (எதிரிலுள்ள கடல்), மணிகர்ணிகை

**வழிபட்டோர்:** அகத்தியர், வசிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர், நாரதர், மாந்தாதா, முசுகுந்த சக்கரவர்த்தி, ஸ்ரீராமர்,

**தலவரலாறு:** இந்து சமய வேதங்களானசதுர் வேதங்கள் என்று அழைக்கப்பெறும் ரிக்,யஜூர், சாம, அதர்வண வேதங்கள் நான்கும் மனித உருவம் கொண்டு இத்தலத்தில் இருக்கும்இறை வனை பூசை செய்து வந்தன.கலியுகம்தொடங்கும் தருவாயில் சிவபெருமான்பூமியில் இருப்பது அவருக்கு உகந்தல்ல என்று எண்ணிய வேதங்கள், அவரிடம் கைலாயம் செல்லுமாறு கூறி, இத்தலத்தின் கதவினையும் அடைத்து விட்டு சென்றன. நெடுங்காலமாக மூடப்பட்டி ருந்த கதவினை திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் தேவாரம் பாடி திறந்து வைத்தனர்.

ஒருமுறை திருநாவுக்கரசரும், திருஞானசம்பந் தரும் திருமறைக்காட்டிற்கு வருகை புரிந்தனர். ஊர் மக்கள் யாவரும் சிறிய திட்டிவாசல் வழியாக கோவிலின் உள்ளே செல்வதையும், கோவிலின் முன்கதவுகள் மூடி இருப்பதையும் பார்த்து விபரம் கேட்டனர். வேதங்கள் பூஜித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளை பதிகம் பாடி திருநாவுக்கரசர் திறக்கவும், திருஞானசம்பந்தர் பதிகம் பாடி திறந்த கதவை மூடவும் செய்த அற்புதம் நிகழ்ந்த தலம் திருமறைக்காடு.

அப்பரும் சம்பந்தரும் பதிகம் பாடி மூடிய கதவை திறக்கவும் மூடவும் செய்த நிகழ்ச்சி இத்தலத்தில் பிரம்மோத்சவ விழாவாக மாசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. இத்தலத்தில் தான் திருஞானசம்பந்தர் கோளறு திருப்பதிகம் பாடியருளினார். பாண்டிய நாட்டு அரசி மங்கையர்க்கரசி பாண்டிய நாடு வரவேண்டும் என்று சம்பந்தருக்கு அழைப்பு விட்டார். மதுரை செல்வதற்கு முன் திருமறைக்காட்டில் தங்கி யிருந்த திருநாவுக்கரசரிடம் கூறிவிட்டுப்போக வந்தார். மதுரையில் உள்ள சமணர்கள் கொடுந் தொழில் செய்பவர்களென்றும் தற்போது நாளும் கோளும் நன்றாக இல்லையென்றுசொல்லி



சம்பந்தர் மதுரை செல்ல வேண்டாம் என்று அறி வுரை கூறினார். அதற்கு சம்பந்தர் சிவபெருமானை வழிபடும் அடியார்களுக்கு நாளும் கோளும் நன்மையே செய்யும் இடர் செய்யாது என்று கூறி திருப்பதிகம் பாடியருளினார்.

இத்தலத்து அம்பாளின் பெயர் வேதநாயகி எனவும் தமிழில் யாழைப் பழித்த மொழியாள் என்றும் வடமொழியில் வீணாவாத விதூஷணி எனவும் வழங்கப்படுகிறது.

அம்பிகையின் குரல் சரசுவதியின்வீணை நாதத்தைவிட இனிமையாக இருந்ததால் அம்பிகைக்கு இங்கே இப்பெயர். இதன் நினை வாக சரஸ்வதி இத்தலத்தில் வீணையில்லாமல் தவக்கோலத்தில் சுவடியைக் கைக் கொண்டு இருப்பதைக் காணலாம்.

இத்தலத்தின் பரிவார தேவதையானதுர்க்கை தென்திசை நோக்கியுள்ளாள். திரிபங்கி வடிவில் நின்ற கோலத்தில் முறுவல் காட்டி எழுந்தருளி உள்ள இக்காவல் தெய்வம் இத்தலத்தில் பிரார்த்தனை தெய்வம். திருமறைக்காடு என்று தமிழிலும், வேத ஆரண்யம் என்று வடமொழி யிலும் வழங்கப் பெறும் மிகப்பழமை வாய்ந்த சிவதலம்.

இக்கோவிலில் இரண்டு பிரகாரங்களும், இரண்டு ஸ்தல விருக்ஷங்களும் உள்ளன. முதல் பிரகாரத்தில் மணிகர்ணிகை தீர்த்தம், விசுவா மித்திர தீர்த்தம், விக்கினேசுவர தீர்த்தம், சுப்பிர மணிய தீர்த்தம் ஆகியவை உள்ளன. மேலும் திருக்கோடி தீர்த்தமும் உள்ளது. இதிலிருந்து தான் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய நீர் எடுத்து உபயோகிக்கப்படுகிறது.

வேதாரண்யம் ஊரில் உள்ள எல்லா கிணற்று நீரும் உப்புக் கரிக்க ஆலயத்தின் உள்ளே இருக் கும் கிணற்று நீர் மட்டும் நல்ல சுவையுடன் இருப்பது ஒரு அதிசயம். கங்கை, யமுனை, நர்மதை, சிந்து, காவேரி போன்ற புண்ணிய நதிகள் மணிகர்ணிகை தீர்த்தத்தில் நீராடி தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்வதாக ஐதீகம். கோவிலின் நேர் எதிரே கிழக்கே கடல்





உள்ளது. இதை வேததீர்த்தம், சந்நிதி தீர்த்தம் என்று அழைக்கின்றனர். இதில் அதிகாலை நீராடி, பின் ஊருக்குத் தெற்கே உள்ள கோடியக் கரையில் உள்ள ஆதிசேது எனும் கடல் தீர்த் தத்தில் நீராடினால் 100 முறை சேதுவில் நீராடு வதற்குச் சமமாம்.

ஆடி அமாவாசை, தை அமாவாசை, புரட்டாசி மாத மஹாளய அமாவாசை நாட்களில் கோடியக் கரை ஆதிசேது, வேதாரண்ய சன்னதி கடலில் நீராடி, பின் மணிகர்ணிகையில் நீராடி முன்னோர் வழிபாடு செய்து, மணமக்களாக எழுந்தருளியுள்ள இறைவன் இறைவியை இவ்வூரில் வழிபடுவது மிகவும் புண்ணியமான ஒன்றாகக் விசேஷமாக கருதப்படுகின்றது. தீர்த்தத்தில் நீராடி தூய்மையான மனத்துடன் இறைவனை வழிபட்டால், முன்வினைப் பாவங்கள், செய்வினைகள் யாவும் அகன்று விடும் என்பது தொன்று தொட்டு வரும் நம்பிக்கை. பிரம்மகத்தி போன்ற பாவங்களும் நீங்கும்.பல ஆண்டுகள் யோகம் , தானம், தவம் செய்த பலன்களை அடையலாம்.

தேவாரத்தின் ஏழு திருமுறைகளிலும் பதிகம் பெற்ற சிறப்பான தலம் என்ற பெருமையை உடைய வேதாரண்யம் என்றும் திருமறைக்காடு என்றும் அறியப்படும் இங்குள்ள தியாகராஜர் மூர்த்தமும் மிகவும் விசேஷமானதாகும். கோவிலின் ராஜ கோபுரம் 5 நிலைகளை உடையது. இறைவன், இறைவி ஆகிய இருவர் சந்நிதியும் கிழக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. துர்க்கையும் தென்திசை நோக்கி திரிபங்கி வடிவில் நின்ற கோலத்தில் புன்முறுவல் காட்டி எழுந்தருளியுள்ளாள். சிறப்பான சக்தி வாய்ந்த பிரார்த்தனைத் தெய்வம். அகத்தியான்பள்ளியில் அக்த்தியருக்கு திருமணக் கோலம் காட்டியருளிய இறைவன் திருமறைக்காடு தலத்திலும் காட்டியருளி உள்ளார். அகத்தியான்பள்ளியைப் போன்றே திருமறைக்காட்டிலும் கருவறையில் சிவலிங்கத்தின் பின்புறம் சிவன் பார்வதி கல்யாண கோலம் அமைந்திருக்கிறது.



சிவத்திரு.குமரேசன்

இராமர் இவ்விடத்தில் சமுத்திர ஸ்னானம் செய்து இராவணனைக் கொன்ற பாவம் நீங்கப் பெற்றார் என்று தலப்புராணம் கூறுகிறது. இராமர் பூஜித்த இராமநாதர் சந்நிதியும் இவ்வாலயத்திலுள்ளது. இராமர் இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை விநாயகர் விரட்டி அடித்ததால் இத்தலத்திலுள்ள விநாயகர் வீரஹத்தி விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

இந்த வீரஹத்தி விநாயகர் ஒரு காலைத் தூக்கிய நிலையில் காட்சி தருகிறார். இவரின் சந்நிதி கோவிலின் மேற்கு வெளிப் பிரகாரத்தில் மேற்கு நோக்கி உள்ளது. இச்சந்நிதிக்கு கொடி மரமும் உள்ளது. இதற்கு அருகில் மேலக்குமரன் சந்நிதியும் உள்ளது.

இத்தலத்தில் உள்ள இந்த முருகப்பெருமான் மேலக்குமரர் அருணகிரிநாதரால் திருப்புகழில் பாடப்பெற்றவர். இக்கோவிலில் நவக்கிரகங்கள் ஒரே திசையை நோக்கி நேர்கோட்டில் காட்சி அளிக்கின்றன. முருகன், துர்க்கை ஆகியோரின் சந்நிதிகளும் கோவிலில் உள்ளன. இத்தலத்தில் பிரம்மா பூஜை செய்து தனது சிருஷ்டித் தொழிலை செய்யலானார். விசுவாமித்திர முனிவர் பிரம்மரிஷி ஆகவேண்டும் என்ற தன் ஆவலை சிவபெருமானை இத்தலத்தில் பூஜித்து நிறைவேற்றிக் கொண்டார்.

அகத்தியர், விசுவாமித்திரர்தவிர, கௌதமர், வசிஷ்டர் இத்தலத்து இறைவனை வழிபட்டுள்ளனர்.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்: 919003296221
easanaithedi.in







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

**கீதாசமையல்**
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

50

காலம் என்பது இருவேறு செயல்பாடுகள் மற்றும் அனுபவங்களின் இடைவெளியாகும். நமது சரீரம், மனம் அனுபவவிக்கக்கூடிய இருவேறு அனுபவங்களின் இடைவெளியை காலம் என்றும் கூறலாம். நமது ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம் தோன்றுவதற்கு எது காரணமாக இருந்ததுவோ அது காரண சரீரம் எனப்படும். நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது மனம் காரண சரீரத்துக்குள் ஒடுங்கி விடுகிறது. நமது மனம் காரண சரீரத்துக்குள் ஒடுங்கி இருக்கும்போது உறக்கத்தில் நாம் காலத்தின் இடைவெளியைக் கணக்கிடுவதற்கு முடியாது. மனிதன் தன்னை மறந்து உறங்கிக் கொண்டு இருக்கும்போது இரண்டு மணி நேரமாக நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன் என்று காலத்தைக் கணக்கிடுவதற்கு அவனால் முடியாது. அவன் உறங்கும்போது காலத்தைப்பற்றி அப்போது நினைத்துப் பார்க்கவும் முடியாது.

நமது ஸ்தூல சரீரத்தைப்போல காரண சரீரத்தை நம் கண்களால் காண்பதற்கு முடியாது. நாம் உலகில் காணும் இன்ப துன்பங்களை காரண சரீரம் அனுபவவிப்பதை நாம் உணர்ந்து கொள்வதற்கு முடியும். நமது ஸ்தூல சரீரத்தை பார்ப்பதற்கு முடியும். ஆனால் சூக்ம, காரண சரீரங்களை ஸ்தூல சரீரத்தைப் போல் பார்க்கவோ அறிந்து கொள்ளவோ முடியாது. ஆனால் காரண சரீரம் இருப்பதை நம்மால் ஆன்மீக வழியில் சென்று குருவின் துணையோடு பயிற்சி மேற்கொண்டால் உணர்ந்து கொள்ள முடியும்.

மனிதனுக்குள் பதினொருவிதமான அநாத்மாக்கள் இருக்கின்றன. அவை விழிப்பு நிலை, கனவுநிலை, ஆழ்ந்த உறக்கம் என மூன்றுவிதமான அவஸ்தைகள், ஸ்தூல, சூக்ம, காரண சரீரம் என மூன்றுவிதமான சரீரங்கள் மற்றும் பஞ்ச கோசங்கள் என்பது ஆகும். அநாத்மாக்களுக்கு அப்பாற்பட்டது ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. பொதுவாக அவஸ்தை என்றால் துன்பம், வேதனை என்று நாம் உலக வழக்கில் கூறுவோம். ஆனால் அவஸ்தை என்றால் அனுபவம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஆத்மா என்பது ஸ்தூல, சூக்ம, காரண சரீரங்களுக்கு வேறான, அப்பாற்பட்ட அழிவு இல்லாத பரம்பொருள் என்று சாஸ்திரம் கூறுகிறது. மூன்று விதமான அவஸ்தைகளுக்கு சாட்சியாக இருப்பது ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது. நம் உறக்கநிலையை வேறுபடுத்தி பார்க்கும்போது கனவுகள் அற்ற நிலையை ஆழ்ந்த உறக்கம் என்று கூறலாம். நமது மனம் ஆழ்ந்த உறக்கத்தில் காரண சரீரத்துக்குள் ஒடுங்கி விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் உலக அனுபவங்களை ஞானேந்திரியங்கள் மூலம் பெறுவது அல்லது நாம் செயல்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது விழிப்பு நிலையாகும். நாம் எப்போது ஞானேந்திரியங்கள் மூலம் நமது மனம் வெளி உலகத்தோடு தொடர்புகொண்டு இன்பம் துன்பம் போன்றவற்றை அனுபவவித்துக் கொண்டிருக்கிறதோ அப்போது நாம் உலகில் விழிப்புநிலையில் இருக்கிறோம். எடுத்துக்காட்டாக கண்கள் காதுகள் போன்ற ஞானேந்திரியங்கள் வெளி உலகத்தோடு தொடர்புகொண்டு காட்சிகளைப் பார்த்தும் கேட்டும் அதன் மூலம் நாம் அடையக்கூடிய இன்ப துன்பங்கள் போன்ற அனுபவங்கள்தான் விழிப்பு நிலை ஆகும்.

நாம் விழிப்புநிலையில் இருக்க வேண்டுமெனில் ஸ்தூல உடல் மீது அபிமானம் வைத்து இருக்க வேண்டும். நமது ஸ்தூல உடலின் மீது பற்று இல்லை என்றால் நாம் ஞானேந்திரியங்கள் மூலம் பெறக்கூடிய உலக அனுபவங்களை அனுபவவிப்பதற்கு முடியாது. எனவே நாம் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும் என்றால் இந்த ஸ்தூல சரீரத்தின் மீது பற்றுதல் அபிமானம் வைத்து இருக்க வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது ஐந்து ஞானேந்திரியங்கள் வெளி உலகத்துடன் தொடர்புகொண்டு அறிவையும் அனுபவங்களையும் விழிப்புநிலையில் பெறுகிறது. கண், காது, நாசி, நாக்கு, மெய் போன்ற ஐந்து ஞானேந்திரியங்கள் கூட்டாக சேர்ந்து அறிவையும் அனுபவங்களையும் பெறுவது மனிதனது விழிப்புநிலை என்ற அவஸ்தையாகும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஞானேந்திரியங்களின் மூலம் வெளிப்படும் சக்தியை கோளகம் என்று சாஸ்திரம் குறிப்பிடுகிறது. கருவிழிகள், இமைகள் என சேர்ந்து இருப்பதை நாம் கண்கள் என்று

கூறுகிறோம். கண்கள் மூலம் வெளிப்படுத்தும் சக்தியை கோளகம் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது கண்கள் ஒரு பொருளைப் பார்ப்பதற்கு அது வெளிப்படுத்தும் சக்தி கோளகம் ஆகும். இதேபோன்று மற்ற ஞானேந் திரியங்கள் மூலம் வெளிப்படும் சக்தியை கோளகம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது காது மடல்கள் வெளித்தோற்றத்தில் அழகாக இருக்கிறது. அந்த அழகிய காதுகள் கேட்கும் சக்தியை இழந்து விட்டால், அந்த அழகிய காதுமடல்களை அவன் பெற்றிருந்தாலும் அவனை செவிடன் செவிடு என்றுதான் கூறுவோம். ஒவ்வொரு ஞானேந்திரியமும் தோற்றத்தில் நல்ல முறையில் இருந்தாலும் அதன் சக்தியை (கோளகம்) வெளிப்படுத்தாமல் குறை பாட்டுடன் இருந்தால் எவ்வித பயனும் இல்லை.

ஞானேந்திரியங்கள் சக்தியை வெளிப் படுத்தி உலகத்துடன் தொடர்புகொண்டு உடலும் மனமும் அறிவையும் அனுபவங் களையும் பெறுகிறது. கண், காது போன்ற ஞானேந் திரியங்கள் நல்ல முறையில் இருக்கிறது என்றால் அவைகள் வெளிப்படுத்தும் இயங்கும் சக்தியை செயல்பாடுகளை வைத்துதான் அழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு மனிதனுக்கு காது மடல்கள் சிறிதாகவோ, பெரிதாகவோ அல்லது தோற்றத்தில் ஏதேனும் குறைபாடுகளுடன் இருந்தாலும் அவன் காதுகள் கேட்கும் சக்தியை நன்கு வெளிப்படுத்தினால் அந்த இந்திரியம் நல்ல முறையில் இயங்குகிறது என்று கூறலாம்.

நமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் வேறுபாடுகள் உள்ளது. எடுத்துக்காட்டாக சூரியனை காலையில் முதன்முதலில் பார்ப்பது ஞானத்திற்காக. அதே சூரியனை மீண்டும் மீண்டும் கண்டு களிப்பது, அதன் மூலம் நாம் பலவிதமான அனுபவங் களை ஞானேந்திரியங்கள் மூலம் பெறு வதற்காக என்று சாஸ்திரம் கூறுகிறது.

நாம் விழிப்புநிலையில் இருக்க வேண்டும் என்றால் இந்த ஸ்தூலசரீரத் தின்மீது அபிமானம் வைத்திருக்க வேண்டும். நாம் சாலையில் நடந்து போய்க் கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது ஒருவர் நம்மிடம் என்ன செய்து கொண்டிருக்கி றீர்கள் என்று கேட்டால், நான் நடந்து கொண்டிருக்கிறேன் என்று கூறுவோம். இங்கு 'நான்' என்பது நமது ஸ்தூல உடலை மனதில் நினைத்துக்கொண்டு கூறுகிறோம். மருத்துவரிடம் நமது உடலைக் காட்டும்போது மருத்துவர் 'என்ன செய்கிறது?' என்று கேட்டால்


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

‘எனக்கு காய்ச்சலாக இருக்கிறது’ என்றுதான் கூறுவோம் என் உடலுக்கு காய்ச்சலாக இருக்கிறது என்று கூற மாட்டோம்.

நமது ஸ்தூல சரீரம் விழிப்பு நிலையில் இருக்கும்போது நமக்குள் ஏற்பட்ட அனுபவங்கள் செயல்பாடுகள் எல்லாம் நமது மனதில் இயல்பாக பதியப்பட்டு விடுகிறது. அவ்வாறு நமது மனதில் பதியப்பட்ட பதிவுகள் எல்லாம் சேர்ந்து உறக்கத்தில் கனவுநிலையில் ஒரு கற்பனை உலகம் பிறப்பிக்கப்பட்டுவிடுகிறது. அவ்வாறு நாம் உறக்கத்தில் சூக்மமாக அனுபவித்து வருவது அல்லது கற்பனை யாக மனம் உலவி வருவதுதான் கனவு நிலை ஆகும். எடுத்துக்காட்டாக நாம் விழிப்பு நிலையில் இருக்கும்போது ஆறுகள், பூக்கள், மலைகள் அருவிகள் போன்றவைகளை பார்த்து மனதில் மகிழ்கிறோம். அவைகள் மனதில் பதியப்பட்டு விடுவதால் காட்சிகள் செயல்பாடுகள் சிலநேரங்களில் சூக்ம சரீரம் மூலம் கனவாக வந்து நாம் உறக்கத்தில் மகிழ்கிறோம். நாம் உறங்கும்போது நமது ஸ்தூல சரீரம் சூக்ம சரீரமாக மாறி உறக்கத்தில் மனம் கனவுநிலையில் இன்ப துன்பங்களை அனுபவவிக்கிறது.

நமது மனதில் இயல்பாக உருவாகும் உலக ஆசைகள் மனதில் பதியப்பட்டு அது கனவாக வெளிப்படுத்திக் காட்டுவது கனவுநிலை அவஸ்தை ஆகும். நம்மை நாமே சுயபரிசோதனை செய்து கொள்வதற்கு நாம் காணும் கனவுகளை வைத்து அறிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக ‘நான் யார் மீதும் கோபப்படுவதில்லை. கோபம் என்னும் குணம் என்னை விட்டு அகன்று விட்டது’ என்று நமக்குள் நினைத்துக் கொண்டிருப்போம். மற்றவர்களிடத்தில் கோபப்படுவதில்லை என்றும் நம்மைப் பற்றி பெருமையாகக்கூட கூறிக் கொள்ளலாம். ஆனால் உறங்கும்போது நீ யாரிடமாவது கோபப்பட்டு பேசுவதுபோல் அல்லது அடிதடியில் ஈடுபடுவதுபோன்று கனவு கண்டால், கோபம் என்னும் குணம் இன்னும் உன்னை விட்டு அகலவில்லை என்பதை கனவின் மூலம் சுயபரிசோதனை செய்து கொள்ளலாம். நமது கனவில் வரும் காட்சிகள்



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மற்றும் செயல்பாடுகளை வைத்து நம்மை சுயபரிசோதனை செய்து கொள்ளலாம்.

நமது ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருக்கும்போது ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை வெளிப்படுத்தும். ஆனால் நாம் உறக்கத்தில் கனவு நிலையில் இருக்கும்போது ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை வெளிப்படுத்துவது இல்லை. எடுத்துக்காட்டாக காது கேளாதவன் உறங்கும்போது கனவில் பறவைகளின் சப்தம், வண்டுகளின் ரீங்காரம், இசை போன்றவற்றைக் கேட்டு அவன் மனம் இன்புறுகிறது. ஸ்தூல சரீரம் சூக்ம சரீரமாக மாறி கனவு காணும்போது கர்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் போன்றவை அதன் சக்தியை வெளிபடுத்துவதில்லை. அதாவது நாம் கண்களை நன்கு மூடி உறங்கிக்கொண்டு இருந்தாலும் கனவில் வரும் காட்சிகளை நமது கண்கள் பார்த்து மகிழ்ந்துகொண்டிருக்கும்.

நமது ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைத்திருந்தால் மட்டும் விழிப்புநிலையில் இருக்க முடியும். அதேபோல் சூக்ம சரீரத்தில் அபிமானம் வைத்திருந்தால் மட்டும் கனவுநிலையில் இருக்க முடியும் என்று சாஸ்திரம் விளக்குகிறது. விழிப்புநிலையில் நாம் பெறும் அனுபவங்களை நமது ஸ்தூல சரீரம் அனுபவவிக்கிறது. கனவு நிலையில் வரக்கூடிய இன்ப துன்பங்களை சூக்ம சரீரம் மட்டும் அனுபவவிக்கிறது. நமது ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருக்கும்போது இன்ப துன்பம் போன்ற அனுபவங்கள் மற்றும் அறிவையும் பெறமுடியும். நாம் கனவு காணும்போது சூக்ம சரீரம் மட்டும் மனதின் மூலம் இன்ப துன்பங்களை அனுபவவிக்க முடியும். நாம் கனவு காணும்போது சூக்ம சரீரம் அறிவு, இன்ப துன்பங்கள் போன்ற அனுபவங்களை பெற முடிவதில்லை. நம் உறக்கத்தில் கனவுகளற்ற நிலையில் இருக்கும்போது நாம் ஓரளவுக்கு அமைதியுடன் இருக்கலாம். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

www.aanmeegamalar.com

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த விரும்பும் வாசகர்கள்...










விருப்ப
**சந்தா**

**UPI & வங்கி எண்**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**